www.padippakam.com

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

ஏப்ரல்-ஜூன் 2012

13

இலங்கை மீதான ஏகாதிபத்தியப் பிடி

இ. தம்பையா

விட்ட இடத்திலிருந்து

சி. சிவசேகரம்

கைலாசபதியும் தமிழ்த் தேசியமும்

தெ.ஞா. மீநிலங்கோ

அடையாள அரசியல்

இமயவரம்பன்

கவிதைகள்: ந. பிரதீபன், ஆடா அஹறரோனி

படிப்பகம்

**ஆசிரியர் தலையங்கம்**

# நாட்டின் இறைமைக்கு மிரட்டல்

ஜெனிவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானதொரு தீர்மானம் நிறைவேறியதற்கு மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் நடத்தை பெரும் பங்களித்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிரான ராணுவ ஒடுக்குமுறையும் யுத்த வெற்றியின் மமதையும் முடிவில்இலங்கை அரசாங்கத்திற்குச் சர்வதேச அரங்கில் தரக்குறைவையும் தலைக்குனிவையுமே ஏற்படுத்தியுள்ளன

தேசிய இனப் பிரச்சினையின் தீர்வின்மையின் பயனான கொடிய போராலேயே போர்க் குற்றங்களும் மனிதவுரிமை மீறல்களும் நிகழ்ந்தன. போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும் அரசியல் தீர்வு நிராகரிப்பும், ஜனநாயக மறுப்பும் மனிதவுரிமை மீறல்களுமே காணக்கிடைக்கின்ற நிலையிலேயே ஐ.நா. தனது நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் விடயத்தை மனித உரிமைகள் பேரவை நிகழ்ச்சிநிரலுக்குட் புகுத்தியது. அதில் அமரிக்காவின் பங்கும் பெரியது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தவோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவோ வேண்டி அமெரிக்கா ஜெனீவாத் தீர்மானத்திற்குப் பின்னிருந்து முழுமூச்சாகச் செயற்படவில்லை. நோர்வீஜிய அனுசரணை பெற்ற அமைதிப் பேச்சுக்கட்குப் பின்னாலிருந்து இலங்கை மீது தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தத் தவறிய அமெரிக்கா இப்போது ஐ.நா. மூலம் தனது தலையீட்டைப் புதுப்பித்துள்ளது. இலங்கை மீது தன் ஆதிக்கப் பிடியை மீள வலுப்படுத்தக் காத்திருந்த அமெரிக்காவிற்குத் தகுந்த வாய்ப்பை வழங்கியதற்கான முழுப் பொறுப்பும் ஜனாதிபதியையும் அவரது தலைமை யிலான அரசாங்கத்தையுமே சாரும்.

நாடுகளில் தலையிடவும் ஊடுருவவும் உள்நாட்டு முரண்பாடுகளைப் பயன் படுத்துவது அமெரிக்காவின் வழமையாகி விட்டது. கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்கிலேயே அது ஜெனிவாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. அதனைத் தடுத்து அமெரிக்க உள்நோக்கத்தை முறியடிக்க இலங்கை அரசாங்கத்துக்கு இருந்த ஒரே வழி தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைத் தாமதமின்றிக் கொண்டு வருவதுடன் நாட்டில் தொடரும் ஜனநாயக மறுப்புச் செயற்பாடுகட்கும் மனித உரிமை மீறல்கட்கும் முடிவுகட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். அது செய்யப்படவில்லை.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் போர் தொடர்பான குற்றங்கள் பேசப்பட்டதற்கும் மேலாக, ஆட்கடத்தலும் காணாமற்போக்கலும் உட்பட்ட மனித உரிமை மீறல்களும் சர்வதேச அளவிற் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. அரசாங்கம் காணாமற் போனோர் பற்றிய சுயாதீன விசாரணையை மேற்கொள்ளவேண்டும் எனவும் சர்வதேச அரங்கில் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

ஜனாதிபதியோ அரசாங்கமோ தமது பேரினவாத ஒடுக்குமுறை நிலைப் பாட்டை நெகிழ்த்தவோ குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவோ ஜனநாயகத் தை மீள நிலைநிறுத்தவோ ஆயத்தமாயிருப்பதாகத் தெரியவில்லை. அதை உறுதிப்படுத்துவது போல, அண்மையில் ஜே.வி.பியினின்று விலகி முன்னிலை சோஷலிசக் கட்சி என்ற கட்சியை நிறுவவிருந்த தலைமை உறுப்பினர்கள் இருவர் அக் கட்சியின் தொடக்க மாநாட்டிற்கு இரு நாட்களே முன்னர் கடத்தப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். முன்பு போலன்றி —அவர்களில் ஒருவர் இலங்கை-அவுஸ்திரேலிய இரட்டைப் பிரசை என்பதால் அவுஸ்திரேலிய அரசாங்கம் செலுத்திய அழுத்தத்தின் பயனாக— அவர்கள் சில நாட்களில் விடுவிக்கப்பட்டனர். எனினும், மாற்றுக் கருத்துடையோரைத் திட்டமிட்டுக் கடத்துவதும் காணாமற்போக்குவதும் பற்றிய அரசாங்கத்தின் அசட்டை தொடருவதையே அரசாங்கப் பிரமுகர்களின் உரைகள் உணர்த்துகின்றன.

முன்னர், அரசாங்கம் போரைப் பற்றிப் பேசிப்பேசி நாட்டு மக்களை வாட்டும் பிரச்சனைகளிலிருந்து கவனத்தை வெற்றிகரமாக விலக்கி வந்தது. இன்று நாட்டின் இறைமைக்கு எதிரான அந்நிய மிரட்டல்களைப் பற்றிப் பேசிவருகிறது. இது பல காலத்துக்குத் தொடர இயலாது. ஏலவே மேலை நாடுகளதும் நிதி நிறுவனங்களதும் கிடுக்கிப்பிடியிற் சிக்கியுள்ள நாட்டின் பொருளாதார அவலம் தவறாமல் மக்கள் மீது பெருஞ்சுமைகளை ஏற்றும். அவற்றை எதிர்க்கத் துணியும் மக்கள் ஒரு அரசியற் சக்தியாக உருவெடுப்பதை அரசாங்கம் அஞ்சுகிறது. எனவே, உடனடி எதிர்காலத்தில் அரசங்கம் சட்டரீதியான ஒடுக்குமுறையை மட்டும் நம்பியிராது என்பது உறுதி.

அரசாங்கத்தின் செல்வாக்கின்மையையும் மனிதவுரிமைக் குற்றங்களையும் பயன்படுத்தி அமெரிக்கா இலங்கை அரசாங்கததைத் தனக்குப் பணிய வைக்கலாம், அல்லது நாட்டில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரலாம். இவற்றில் எதுவுமே மக்களுக்கு நன்மையான மாற்றமுமல்ல, நாட்டின் இறைமையைக் காப்பதுமல்ல. எனவே நாட்டின் முற்போக்குச் சக்திகள் மாற்று அரசியல் பற்றிக் கூடிய கவனமெடுத்துத் துரிதமாகச் செயற்பட வேண்டும்.

அவர்களுடைய செயற்பாடுகள், கடந்காலத் தவறுகள் மீளவும் நிகழாது தவிர்க்கும் நோக்குடையனவாக, நாட்டின் தேசிய இனங்களைச் சமத்துவமான முறையில் சுயநிர்ணய அடிப்படையில் ஒன்றுபடுத்துவனவாக, குறுகியகால நலன்களைக் கடந்து நீண்டகால நோக்கில் மக்கள் அரசியலையும் மக்கள் போராட்டத்தையும் முன்னெடுப்பனவாக அமைய வேண்டும்.

www.padippakam.com

# இலங்கை மீதான ஏகாதிபத்தியப் பிடி

## சுருக்கமான ஒரு கருத்துரை

### *தோழர் இ. தம்பையா*

**(2011 நவெம்பர் 27-29இல் டாக்காவில் நடந்த மூன்றாம் சர்வதேச ஏகாதிபத்திய விரோத மாநாட்டில் தோழர் இ. தம்பையா வழங்கிய இரண்டாவது கட்டுரை)**

இலங்கை, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் எனும் தேசிய இனங்களையும் தொல்குடியினர், பறங்கியார், மலாயர் உட்பட்ட தனித்துவமான சமூகங்களையுங் கொண்ட 65,610 சதுர கிலோமீற்றர் (25,332 சதுர மைல்) பரப்புடைய தீவாகும்.

பிரபுத்துவப் பண்பாட்டின் எச்சங்கள் இலங்கையில் வாழ்வின் மீதான செல்வாக்கைச் செலுத்தும் போதும், பெரும்/தரகு முதலாளிய வர்க்கங்களும் அதிகாரி-முதலாளிய வர்க்கங்களும் ஏகப்பெருமளவும் பழமைவாதப் பௌத்த முதலாளிகளைக் கொண்டனவாகவே உள்ளன. தொழிலாளர், விவசாயிகள், மற்றும் பிற உழைக்கும் வெகுசனங்கள் மீதும் சிறு வணிகர்கள், நடுத்தர வர்க்கத்தினர், பெண்கள், இளையோர், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மீதும் இலங்கையின் நவகொலனிய அரசு ஆட்சி செலுத்துகிறது.

1505 முதல் இலங்கை போர்த்துக்கல்லின் கொலனியாயிருந்தது. 1658இல் பொறுப்பேற்ற டச்சுக்கரர் பிரித்தானியரிடம் இலங்கையை ஒப்படைத்த பின்னர் பிரித்தானியர் 1796 முதல் 1948 வரை ஆண்டனர். 1815 வரை கரையோர மாகாணங்கள் மட்டுமே நேரடியான கொலனி ஆட்சிக்குக் கீழிருந்தன. இலங்கை முழுவதையும் பிரித்தானியர் 1815இல் ஒரே ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தனர். தமது பிரித்தாளும் மூலோபாயத்துக்குப் பெயர்பெற்ற பிரித்தானியர், 1948இல் அரச அதிகாரத்தை இலங்கையின் முதலாளி வர்க்கத்திடம் ஒப்படைத்துப், பிரித்தானியர் வரைந்த அரசியல் யாப்பின் அடிப் படையில், வெஸ்ற்மின்ஸ்றர் வகையிலான பாராளுமன்ற ஆட்சியை இலங்கை மீது திணித்தனர். சுதந்திரம் கோரிப் பிரித்தானிய கொலனி ஆட்சிக்கு எதிராகக் குறிப்படத்தக்க எந்த மக்கள் போராட்டமும் நடக்கவில்லை என்பதுடன், சுதந்திரத்துக்கான கோரிக்கை பேரளவிலானதாகவும் ஏகாதிபத் திய எதிர்ப்புணர்வு இல்லாதும் இருந்தது என்பதும் குறிப்பிட வேண்டியன. அரசியல் யாப்பு, சிறுபான்மைத் தேசிய இனங்கட்குச் சில சலுகைகளை வழங்கிய போதிலும், அவை ஆக்கிரமிப்புத்த தன்மைகொண்ட ஒரு பெரும் பான்மைக்கு எதிராகப் போதுமான பாதுகாப்பை வழங்கவில்லை.



படிப்பகம்

1948 முதல், இலங்கையை ஐக்கிய தேசியக் கட்சி (யு.என்.பி.), ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) ஆகிய இரு பிரதான அரசியற் கட்சிகள் ஆண்டு வருகின்றன. 1960 அளவில் பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்த லங்கா சமசமாஜக் கட்சி (ல.ச.ச.க.) இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி (இ.க.க.) ஆகிய மரபான இடதுசாரிக் கட்சிகள், ஸ்ரீ.ல.சு.க.வுடன் கூட்டணி களில் இணைந்து, காலத்துக்குக் காலம் அரசாங்கத்திற் பங்காளிகளாக இருந்து வந்துள்ளன.

ஸ்ரீ.ல.சு.க. தலைமையில், ல.ச.ச.க.வையும் இ.க.க.வையும் பங்காளிகளாக வும் சிரிமா பண்டாரநாயக்கவைப் பிரதமராயும் கொண்ட அரசாங்கம் குடி யரசு யாப்பு எனச் சொல்லப்பட்ட ஒன்றை 1972இல் அறிமுகமாக்கியதுடன் இலங்கையின் மீதான நேரடியான பிரித்தானிய ஆதிக்கம் முடிவடைந்தது. பவுத்தமும் சிங்கள மொழியும் சிறப்பான தகுதிகளைக் கொண்டிருக்குமென உறுதிப்படுத்தியதன் மூலம் அந்த யாப்பு சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சத்தை வெளிப்படையானதாக்கி சிங்கள-பவுத்தப் பெரும்பான்மை ஆட்சியை நிறுவனப்படுத்துவதில் மேலும் ஒருபடி முன் சென்றது. குறிப்பிடத் தக்க விதமாக, இக் காலத்தில் அணிசேரா இயக்கத்தில் இலங்கை முக்கிய பங்கு வகித்தது.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் நாடு முன்கண்டிராத ஒரு பெரும் பான்மையுடன் ஆட்சிக்கு வந்த யூ,என்.பி. 1978இல் கொண்டுவந்த யாப்பு, 1972ம் ஆண்டின் யாப்பை மேவியது. இப் புதிய யாப்பு நிறைவேற்ற திகாரச் சனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியதுடன் இலங்கையின் இறைமையை ஏகாதிபத்தியத்திடம் சரண்புகுவிக்க வழிசெய்தது. திறந்த பொருளாதாரக் கொள்கை மூலமும் முன்னைய அணிசேராக் கொள்கைக்கு முரணாக ஏகாதிபத்தியச் சார்பு நிலைப்பாட்டை மேற்கொண்டதன் மூலமும் அது செயற்படுத்தப்பட்டது.

இலங்கை மீது அமெரிக்காவின் செல்வாக்கின் எழுச்சியை வெறுத்த இந்திய மேலாதிக்கச் சக்திகள் இலங்கையின் கொந்தளிப்பான தேசிய இனப் பிரச்சனையைப் பயன்படுத்தி, இலங்கையை இந்தியாவுக்குப் பணியவைத்து, அப்போது இலங்கையின் சனாதிபதியாயிருந்த ஜே.ஆர். ஜயவர்தனவைக் கட்டாயத்தின் மூலம் 1987இல் இந்தியாவுடனான 'சமாதான உடன்படிக்கை யில்' ஒப்பமிடச் செய்தனர்.

1977க்கும் 1994க்கும் இடையிலான யு.என்.பி. ஆட்சியின் போது, பெருந் தோட்டங்கள் உட்பட, அரசுக்குரிய பெரிய நிறுவனங்களிற் பெரும்பாலா னவை பன்னாட்டுக் கம்பனிகட்கு விற்கப்பட்டன அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. 1994இல் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான கூட்டணி சந்திரிகா குமாரதுங்கவைச் சனாதிபதியாகக் கொண்டு அதிகாரத்துக்கு வந்தபோது அது "மனித முகத்துடனான திறந்த பொருளாதாரத்தை" அறிவித்து, இலங் கையை ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் பாதையிற் செலுத்தியது. மகிந்த

www.padippakam.com

ராஜபக்ச, 2005இன் இறுதிப் பகுதியில் நிறைவேற்றதிகார சனாதிபதித் தொட ரோட்டத்தைப் பொறுப்பேற்றார். அவர் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிரானவரல்ல. எனினும், தனது ∴பாஸிஸ ஆட்சியைப் பற்றியோ 2009இல் பிரிவினைவாத இயக்கமான விடுதலைப் புலிகட்கு எதிரான ராணுவ நடவடிக்கையின்போது தனது பாதுகாப்புப் படைகள் தமிழ் மக்கள் மீது இழைத்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்களைப் பற்றியோ எந்த அயல் நாட்டிடமும் கேள்விக்குட்படுவதை அவர் விரும்பவில்லை.

1977க்குப் பின்பான அரசாங்கங்களில் ஏறத்தாழ அனைத்துமே தமிழ்ப் பிரதேசங்களில் போர் தொடுத்தும் 'அரசியல் தீர்வொன்றை' அடைவதற் கானவை எனப்படும் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டும் உள்ளன.

அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் தமிழர் மீது கட்டவிழ்த் துவிட்ட ஒடுக்குமுறை, தமிழ் இளைஞர்களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளுடன் மோதுமாறும் ஏலவே மரபுவாதப் பிற்போக்குத் தமிழ்ப் பாராளுமன்ற அரசியல் தலைமை "தமிழ் ஈழம்" என்ற பேரில் முன் வைத்திருந்த வடக்கு-கிழக்கின் தமிழ் மக்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கை யை வற்புறுத்துமாறும் கட்டாயப்படுத்தியது. ஈற்றில், பாதுகாப்புப் படைக ளுக்கு மாறான ஆயுதந் தாங்கிய எதிர்ப்பியக்கததின் மீது விடுதலைப் புலிகள் முழு அதிகாரமுடையோராயினர்.

போர்க்காலத்தின் போதும், அமைதிப் பேச்சுக்கள் எனப்பட்டவற்றின் போதும் போருக்குப் பின்பான காலத்திலும் நிகழ்ந்துவந்த நவகொலனியப் பொருளாதாரத் தாக்குதலுக்கும் அப்பால், அந்நிய சக்திகள் இலங்கையின் மீது தமது பிடியை இறுக்கியுள்ளன. 1990கட்கு முன்பு இந்திய மேலாதிக்கச் சக்திகள் இலங்கையில் அதிக ஆதிக்கஞ் செலுத்தின. 1990களிலும் பின்னரும் அமெரிக்க, மேற்குலக, ஜப்பானிய ஏகாதிபத்தியச் சக்திகள் தமது செல்வாக்கை அதிகரித்தன. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத் துக்கமிடையிலான பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணையைப் பயன் படுத்தி, அவை இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையில் தலையிட்டன. அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியச் சக்திகள் விடுதலைப் புலிகளின் பிரிவினைக் கோரிக்கையை இலங்கைக்கு எதிரான ஒரு மிரட்டல் தந்திரமாக பயன்படுத்தாத போதிலும், தமது செல்வாக்கை வலுப்படுத்த அமைதிப் பேச்சுக்களைப் பயன்படுத்தின. போருக்குப் பின்பு மனித உரிமைகள், போர்க் குற்றங்கள் ஆகிய பிரச்சனைகளை முன்னெடுத்துள்ளன. எனினும் இது தமிழ் மக்களின் நலன் கருதியல்ல.

நோர்வேயின் அனுசரணையுடனான அமைதிப் பேச்சுக்கட்குக் குழிபறிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா, தொடக்கத்திலிருந்தே, எடுத்துவந்தது. பிரபுத்துவ, சிங்களப் பழமைவாத அணுகுமுறையும் அமைதி முயற்சிகளின் மீது பகைமையையும் கொண்ட ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்ததும் இந்தியா வின் வாய்ப்புக்கள் முன்னேறின. விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதும்



படிப்பகம்

www.padippakam.com

1987இன் இலங்கை-இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் நிறுவப்பட்ட மாகாண சபைகள் முறையை நடைமுறைப்படுத்துவதுமே இந்தியாவின் நோக்கங்களாய் இருந்தன. தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வாக எண்ணப் பட்ட அம் மாகாண சபைகள் முறை, தமிழ் மக்களின் தேசிய அபிலாட்சை களைக் குறைந்த அளவிலேனும் —பிற ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களது அபிலாட்சைகளை அதினுங் குறைவாகவேனும்— நிறைவேற்றத் தவறியமை கவனத்துக்குரியது. மாகாண சபைகள் முறையை நடைமுறைப்படுத்தும் நோக்கமே அற்ற மஹிந்த ராஜபக்சவுக்கு விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை மட்டுமே தேவைப்பட்டது. அவர் சீனா, பாக்கிஸ்தான், வியற்நாம், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தினார். ஏவ்வாறாயினும், அவர் போரைத் தொடங்கியவுடன், முற்குறிப்பிட்ட நாடுகளும் இந்தியாவும் மட்டுமல்வாது —சர்வதேச மனிதாபிமானச் சட்டங் களின் பாவனை பற்றிய தமது தெளிவீனமான கோரிக்கைகளுடன்— அமெரிக் காவும் பிரித்தானியாவும் ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கின.

போர் முடிந்த பின்னர், இலங்கை மீது ஆதிக்கஞ் செலுத்துவதற்கான அந்நிய நாடுகளின் போட்டி மிக வலுவாகியுள்ளது. தமது பொருளாதார ஆக்கிரமிப்பின் மூலம் இந்தியாவும் சீனாவும் இலங்கையில் தமது பங்கை மேலும் அதிகரித்துள்ளன. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் மனித உரிமைகளையும் போர்க் குற்றங்களையும் பற்றிய பிரச்சனைகளை முன்னிறுத்தி இலங்கை அரசை மிரட்டுகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய அனுசரணையுடன் ஐ.நா. மூலம் இலங்கைக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் வலுவானவையாகத் தெரிகின்றன.

இந்தியா நடுநிலைத் தோற்றங் காட்டுகையில், பாக்கிஸ்தானும் சீனாவும் ரஷ்யாவும் வியற்நாமும் ஈரான் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகள் பலவும் கியூபாவும் வெனசுவேலாவும் போன்ற லத்தின் அமெரிக்க நாடுகளும், மனித உரிமைகளயும் போர்க் குற்றங்களையும் பற்றிய பிரச்சனைகளின் அடிப்படை யில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஐ.நா.வும் இலங்கைக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கின்றன.

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானவையாகவும் இந்தியாவும் பாக்கிஸ்தானும் சீனாவும் ரஷ்யாவும் வியற் நாமும் ஈரான் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளும் கியூபாவும் வெனசு வேலாவும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவானவையாகவும் தோன்றுகின் றன. ஆனால் ஒவ்வொரு நாடும் தனது நலன்களைப் பேணும் நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்தினதும் பெரிய நாடுகளினதும் சவால்கட்கு முகங்கொடுப்பதற்கு இலங்கையின் ஆதரவைப் பெறவேண்டி விருத்தியடைந்துவரும் நாடுகளும் பலவீனமான அரசுகளும் இலங்கை அர சாங்கத்தை ஆதரிப்பதாகத் தெரிகிறது. ஏகாதிபத்தியமும் பெரிய நாடுகளும், அவை இலங்கையை ஆதரிக்கின்றனவா எதிர்க்கின்றனவா என்பதற்குமப்பால்,



படிப்பகம்

இலங்கையில் தமது ஏகாதிபத்திய, மேலாதிக்க நலன்களைக் கொண்டு ள்ளன. ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டு ஒடுக்கு முறையாளர்கட்கும் இடை யிலான முரண்பாடுகள் நிரந்தரமானவையல்ல. ஆனால் ஏகாதிபத்தியத்துக் கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் நிரந்தரமானவை.

இலங்கை ஏகாதிபத்திய, மேலாதிக்கச் செயற்பாட்டு அபாயத்துக்கு உட்பட்டிருப்பதைப் பொதுவாக இலங்கை மக்கள் அனைவரும் உணரக் கூடும். எனினும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு பொதுத் தளத்தில் இணைவதற்கோ ஒரு பொதுவான புரிதலை வந்தடைவதற்கோ தடையாக இனத்துவ, தேசிய இன வேறுபாடுகள் உள்ளன. தமிழரிடையே அவர்க ளுடைய பிற்போக்குவாதத் தலைமை பரப்பியுள்ள கருத்து ஏதெனின் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அவர்கள் ஏகாதிபத்தியத்தைப் பயன் படுத்த இயலும் என்பதுடன் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகப் பேசும் எவரும் தமது நண்பர்கள் என்பதுமாகும். தமிழர் தமது தனித் தமிழ் நாட்டை நிறுவ ஸியோனிச இஸ்ரேலைப் பின்பற்ற வேண்டும் எனும் அளவுக்குத் தமிழ்த் தலைமைகள் போயுள்ளன. புலம்பெயர் தமிழ் மேட்டுக்குடிகள் தமது “நாடு கடந்த தமிழீழ அரசின்” மூலம் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைக் கொண்டுவர முனைகின்றனர்.

மறுபறம் சிங்களவர்களிடையே அவர்களுடைய பேரினவாதத் தலைமை பரப்பியுள்ள கருத்து ஏதெனின், தமிழர்கள் ஏகாதிபத்தியத்தின் கைகளுள் உள்ளனர் என்பதுடன் அவர்களுடைய கோரிக்கைகள் ஏகாதிபத்தியத்தின் கைவேலைகள் என்பதாகும். அதன் மூலம், மஹிந்த ராஜபக்சவும் தமிழரை எதிர்க்கும் எல்லாரும், ஏகாதிபத்திய விரோதிகள் எனச் சிங்கள மக்கள் நம்பச் செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இலங்கையின் மக்களை இனத்துவ அடிப்படையில் பிரித்து இலங் கையில் வலுவான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுசன இயக்கம் தோன்றா மல் தடுப்பதிதும் பெரும்பான்மைத் தேசிய இனம் ஒடுக்கு முறையாளரை ஆதரிக்க்கும் சூழலை உருவாக்குவதிலும் ஏகாதிபத்தியம் வெற்றி கண்டுள்ள தாகவே தெரிகிறது. மற்ற எந்த இடத்திலும் போன்று, இலங்கையிலும் அதன் அரசு தனது ஒடுக்குமுறைச் செயற்பாடுகளின் பயனாக ஏகாதிபத்தியத்திடம் சரணடைவதையே ஏகாதிபத்தியம் வேண்டுகிறது. அது உறுதிப்படுமாயின், இலங்கைக்கு எதிரான மனித உரிமைகளும் போர்க் குற்றங்களும் பற்றிய பிரச்சனைகளை மட்டுமன்றித், தேசிய இனப் பிரச்சனைக்குரிய தீர்வுக்கான அழைப்பையும் ஏகாதிபத்தியம் மறந்துவிடக் கூடும்.

ஏகாதிபத்தியமும் அந்நிய மேலாதிக்கமும் தேசிய இனப் பிரச்சனையைப் பயன்படுத்துவதும் ராணுவ உடன்படிக்கைகளும் போன்ற சர்வதேச அரசியல் வழிமுறைகளினூடு இலங்கையை ஆதிக்கத்துக்கு உட்படுத்துவதற்கும் மேலாக, இலங்கையில் உள்ள தமது பூதாகரமான பொருளாதார நலன்களி னூடாகவும் ஆதிக்கத்துக்கு உட்படுத்துகின்றன. அமெரிக்காவும் ஐரோப்பிய

ஒன்றிய நாடுகளும் தமது ஜி.எஸ்.பி. சலுகைகள் மூலம் இலங்கையில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் இலங்கையின் ஏற்றுமதி வணிகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. எப்பாவெல பொஸ்பேற் அகழ்வை அமெரிக்கா பொறுப்பேற்றுள்ளது. இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு உடன் படிக்கை ஒன்றையும் சுதந்திர வர்த்தக உடன் படிக்கை ஒன்றையும் செய் துள்ளதுடன், இலங்கையின் இறக்குமதி வணிகத்தில் அதி ஆதிக்க நிலை யில் உள்ளது. 1987இன் சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் திரு கோணமலைத் துறைமுகத்தை அண்டிய எண்ணெய்ச் சேமிப்பு வசதிகளுக் குப் பொறுப்பேற்றதற்கும் மேலாக, இலங்கையின் எண்ணெய் இறக்குமதியை யும் தன் கட்டுப்பாட்டினுட் கொண்டுள்ளது. பலவாறான சேவைத்துறைகளை யும் உள்ளடக்கும் சீபா எனும் பொருளாதார உடன்படிக்கையைப் பற்றியும் மன்னார்க் குடாவில் எண்ணெய்க்கான அகழ்வைப் பற்றியும் இந்தியா அதி தீவிரத்துடன் நிற்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலையை ஏற்கெனவே பொறுப்பேற்றுள்ளதுடன், அது புகையிரதப் பாதைகளையும் நெடுஞ்சாலைகளையும் அமைத்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் அனல் மின் நிலையத்திற்காகப் பெருமளவிலான நிலத்தைத் தன்வசமாக்கியுள்ளதுடன் புல்மோட்டையிலும் திருக்கோவிலிலும் கனிவள மணல் அகழ்வைப் பொறுப்பேற்கவும் அது பேராசைப்படுகிறது. இலங்கையில் தேயிலை உற்பத்தியும் வணிகமும் வேறு பயிர்ச் செய்கைத் திட்டங்களும் இந்தியக் கம்பனிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. கூட்டு முயற்சிகளாகவும் தனியாகவும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளையும் அவை மேற்கொண்டுள்ளன.

இலங்கைக்கான சீன உதவி இந்தியாவினதைப் பன்மடங்கு மேவிவிட்டது. அது சர்வதேசத் துறைமுகமொன்றை அம்பாந்தோட்டையில் நிர்மாணிப்ப துடன் பல நெடுஞ்சாலைகளையும் அமைத்துவருகிறது. நுரைச்சோலையில் அனல் மின் நிலையமென்றையும் அது நிறுவியுள்ளது. சீனாவின் முதலாளி யப் பொருளாதார வளர்ச்சியின் விளைவாகச், சீனா இலங்கையில் ஒரு பெரும் சந்தை விரிவாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கை இப்போது இப் பிரதேசத்தில் சீனாவின் கடல் வலிமையின் விரிவாக்கத்தில் முக்கிய மூலோபாயத் தானமாகியுள்ளது.

தொழில்நுட்ப இடமாற்றம், மோட்டார் வாகன வணிகம், மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தைப் பொறுப்பேற்றமை என்பன மூலம் ஜப்பான் இலங்கை மீதான ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

உலகமயமாக்கப்பட்ட ஏகாதிபத்தியப் பண்பாடு பல்வேறு பேர்களிலும் வடிவங்களிலும் இலங்கையை ஊடுருவியுள்ளது. ஹொலிவுட், பொலிவுட், கோலிவுட் வகையிலான நச்சுச் சினிமாப் பண்பாடு இலங்கையின் அனைத்துத் தேசிய இனங்களுக்குள்ளும் வீரியமாக ஊடுருவியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

போர் தீவிரமாக நடந்தபோது இலங்கைக்குப் பெருந்தொகையான கடன் தொகைகளை வழங்கிய சர்வதேச நாணய நிதியம், கூடவே இலங்கை மீது கடும் நிபந்தனைகளையும் விதித்திருந்தது. அதிகளவிலான வரிகளையும் விலைகளையும் தவிர்ப்பது இலங்கைக்கு இயலாமலாகும் விதமாக, அது, இலங்கையின் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை அரைப் பங்காற் குறைக்குமாறு வற்புறுத்தியது. இலவசக் கல்விக்கும் மருத்துவத்துக்குமான அரச நிதி வழங்கலைக் குறைக்குமாறும் அரச ஓய்வூதியத்தை நிறுத்த இயலாவிடின் குறைக்கவும் அழுத்தங்கள் உள்ளன. இலங்கை ஒரு சுற்றுலாத்தலமாக முற்றுமுழுதாக மாற்றப்பட வேண்டும் எனும் நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியமும் அந்நிய மேலாதிக்கமும் இலங்கையிற் கொண்டுள்ள பிடிக்கான முக்கிய சான்றுகளில் முற்கூறியவை அடங்கும்.

பிரித்தானிய கொலனித்துவத்துக்கு எதிரான இயக்கங்கள் வலுவுடனோ ஒற்றுமையுடனோ இல்லாமை ஒருபுறமிருக்கக், குறிப்பான பிரச்சனைகளில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எழுந்தமான போராட்டங்களை விட்டால், வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுசன இயக்கம் எதுவுமே 1948க்குப் பின்பு உருவாகவில்லை. இலங்கையின் பெரிய இடதுசாரிக் கட்சிகள் எனப்படுவனவற்றின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடுகள் அனைத்தும், வழமைபோல், இலங்கையின் ஒடுக்குமுறை அரசாங்கத்தைப் பாதுகாப்பதுடன் இணங்கிப் போகக்கூடிய மே தினச் சுலோகங்களுள் பெரிதும் முடங்கிக் கிடக்கின்றன.

மாறாகப் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி தனது ஏகாதிபத்திய எதிர்ப்புச் செய்நிரல்களைத் தொடர்ச்சியாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் முன்னெடுத்து வருகிறது.

சிறிய குழுக்களுக்கும் அப்பால், சர்வதேச ஒத்துழைப்பு மக்கள் அமையம், இலங்கையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கொள்கையிலும் நடைமுறையிலும் வலுவான ஐக்கிய வெகுசன இயக்கமாகக் முன்னோக்கிச் செல்லுகிறது. ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டு ஒடுக்குமுறையாளருக்கும் இடையிலான முரண்பாட்டையும் ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டையும் கையாளுவதற்கான தெளிவான பார்வை அதனிடம் உண்டு. அது வருடாந்தம் ஜனவரி 1ம் நாளை ஏகாதிபத்திய எதிர்ப்பு நாளாகக் கொண்டாடி வருகிறது. இந்த அமைப்பும், இலங்கையில் வலுவானதொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்த்தைக் கட்டியெழுப்புவதற்கு மேலும் வலிமையையும் விரிவான செயற்பாட்டுத்தளத்தையும் வேண்டியுள்ளது.

*****



படிப்பகம்

www.padippakam.com

# விட்ட இடத்திலிருந்து...

*சி.சிவசேகரம்*

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி தவிர்க்க இயலாதது என்பதை 2006இல் போர் மீண்டும் தொடங்கி ஓராண்டிற்குள் பலர் விளங்கிக் கொண்டனர். எனினும் எல்லாராலும் எண்ணங்களை வெளிவெளியாகக் கூற இயலவில்லை. அக் கருத்தை முன்வைப்பது விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் என்பது சிலருடைய காரணமாயிருந்தது. அது அரசாங்கத்தின் போர் முனைப்பை ஊக்குவிக்கும் என்பது வேறு சிலருடைய கவலையாயிருந்தது. எனினும், விடுதலைப் புலிகள் தோல்விக்குப் பின் தோல்வியைச் சந்திக்கத் தொடங்கிய 2006ன் பிற்பகுதியை அடுத்தும், புலிகள் வென்றுகொண்டே இருப்பதாகச் சொன்னவர்கள் விடுதலைப் புலிகளின் இறுதிக்கட்டம் வரை அதே கதையையே சொல்லி வந்தார்கள். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மக்கள் என்ன எதிர்பார்ப்பில் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து முல்லைத்தீவுக்குப் பின் வாங்கினார்கள் என்பதற்கு ஒற்றை விளக்கம் இருக்குமென நான் நம்பவில்லை. ஆனால் அவர்களைத் தமது கொலைக் களத்திற்கும் முட்கம்பிச் சிறைவாழ்வுக்கும் இட்டுச் சென்ற குற்றத்தில் விடுதலைப் புலிகளினளவுக்கு புலிகளுடைய ஆதரவாளர்களுக்கும் புலிகளை மூர்க்கத்தனமாக எதிர்த்தவர்களுக்கும் பெரும் பங்குண்டு.

விடுதலைப் புலிகள் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளையும் உயிரிழப் புக்களையும் பற்றிக் காட்டிய அக்கறையீனத்தைக் கடுமையாக விமர்சிக்க வேண்டியுள்ளது. அதேவேளை, புலிகளைக் கண்மூடித்தனமாக எதிர்த்தோர், புலிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியில் வாழ்ந்து ஒரே காரணத்திற்காக, அரசாங்கத்தால் அம் மக்களுக்கு நேர்ந்த துன்பங்களையும் அழிவுகளையும் பற்றி மிக அசட்டையாகவே இருந்தனர் என்பதையும் மறுக்க இயலாது.

எனவே, போரின் இறுதியாண்டின் போது, புலிகளும் அரசாங்கமும் புலிகளின் ஆதரவாளர்களும் கடும் எதிர்ப்பாளர்களும் மக்களுடைய நலன் களைப் பற்றி எதுவிதமான அக்கறையையும் காட்டியதாகக் கூற இடம் இல்லை. போர் முடிந்த பின்பிருந்து வெளிப்படுத்தப்பட்டு வருகிற அக்கறை களும் அரசியற் செயற்பாடுகளும் அதை உறுதிப்படுத்துகின்றன. இன்றும், இலங்கை அரசாங்கத்தின் மீதான போர்க் குற்றங்களை விசாரிப்பதைப் பற்றிய தீவிர நிலைப்பாடுகள் அனைத்துமே அரசாங்கத்தைப் பழி வாங்குவதையோ விடுதலைப் புலிகளைப் பழி தீர்ப்பதையோ பற்றிக் கவனங்



படிப்பகம்

www.padippakam.com

காட்டுமளவுக்குப் போராற் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிய எவ்வித அக்கறையையுங் காட்டுவதாகக் கூற இயலாது.

இவற்றிடையே, இன்னமும் கவனத்திற்குரிய உள்ள விடயம் ஒன்றுள்ளது. 1987 முதல் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி வரை, விடுதலைப் புலிகளை மையப்படுத்தியே தமிழ்த் தேசியத்தின் அரசியற் பரப்பில் விவாதங்கள் பொதுவாக நிகழ்ந்து வந்துள்ளன என்பதுடன் இன்றும் அதே போக்கையே காண முடிகிறது. இப் போக்கு புலம் பெயர்ந்தோரிடையே வலுவாகவும் வெளிவெளியாகவும் காணப்படும் அதே வேளை, இலங்கையில் அது மறைமுகமாகத் தொடருகிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தைத் தமிழீழக் கோரிக்கையுடன் சமன்படுத்துகிற தன்மை தமிழீழப் பிரகடனத்துடன் தொடங்கி ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியுடன் வலுப்பட்டது. என்றைக்கு விடுதலைப் புலிகள் தம்மையே ஆயதப் போராட்டத்தின் தலையாய சக்தியாக நிலை நிறுத்தினரோ அன்று முதல் அச் சமன்பாடு விடுதலைப் புலிகளை விடுதலைப் போராட்டத்துடன் சமப்படுத்துகிற திசையில் நகரத் தொடங்கிவிட்டது. அதை இயலுமாக்குவதில் விடுதலைப் புலிகளின் வன் முறை அரசியலும் சனநாயக விரோதச் செயற்பாடுகளும் முக்கியமான பங்கு வகித்தன என்பதில் ஐயமில்லை. அதே அளவுக்கு இந்திய, இலங்கை அரசாங்கங்களைச் சார்ந்து பிற போராளிக் குழுக்களின் பலவும் செயற் பட்டமையும் விடுதலைப் புலிகளை முக்கியப்படுத்த உதவின.

மேற்கூறிய நிகழ்வுகளில் எதுவுமே தமிழ் மக்களின் விடுதலைக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்கவில்லை என்பது இப்போது பலருக்கும் தெளிவாகி இருக்க வேண்டும். அந்த ஆபத்தை உணர்ந்தவர்கள் வாய் திறக்க இயலாத விதமாகப் பலவலாறான நெருக்குவாரங்கள் இருந்து வந்துள்ளன. அதைப் பற்றி எவரும் வாய் திறக்கும் போதெல்லாம் புலி ஆதரவு x புலி எதிர்ப்பு என்கிற விதமாக முத்திரை குத்திக் கருத்துக்களை முடக்கும் முயற்சிகளை நாம் பல சூழல்களிலும் கண்டுள்ளோம்.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்பும், புலிகளையே மையப்படுத்திக், கருத்துக்களையும் அவற்றுக்குரியயோரையும் புலிகளை ஆதரித்தோர் அல்லது எதிர்த்தோர் என்றவாறு அடையாளப்படுத்தி அதையே அளவு கோலாக்கிக் கருத்துக்களை ஏற்பதும் எதிர்ப்பதும் தொடருகிறது. இதற்கான காரணங்கள் எவையாயினும், கடந்த கால் நூற்றாண்டுக் காலத் தமிழ் தேசிய அரசியலில் புலிகளின் ஆதிக்கத்தின் தாக்கத்திலிருந்த தமிழ்த் தேசிய இனம் விடுபடுவது எளிதல்ல என்பது மட்டும் தெளிவு.

எனவே, தமிழ்த் தேசியத்தின் எதிர்காலமும் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலமும் பற்றிய தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்குக் கடந்த காலம் பற்றிய தெளிவான புரிதல் தேவை என்பதையும்



படிப்பகம்

விடுதலைப் புலிகளைப் பற்றிய விவாதங்கள் தவிர்க்க இயலாதன என்ப தையும் ஏற்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். நமக்கு முன்னாலுள்ள பல சவால்களில் அனைத்தையுமே விடுதலைப் புலிகளின் சாதனைகளாக வோ மாறாக அவர்களது குற்றங்களாகவோ நோக்குகிற தன்மையினின்று விடுபடுவது முக்கியமானது. விடுதலைப் புலிகள் போராட்டத்தின் மையச் சக்தியாக இயலுமாக்கிய அகக் காரணிகளையும் புறக் காரணிகளையும் விளங்கிக் கொள்வது முக்கியமானது. தேசியம், சுயநிர்ணயம், தேசிய இன விடுதலை என்பன பற்றிய நமது புரிதல்களைச் செம்மைப்படுத்துவது முக்கிய மானது. தமிழ் மக்களின் விடுதலை எவ்வாறு இலங்கையின் பிற தேசிய இனங்களின் விடுதலையின்று பிரிக்க இயலாததாக உள்ளது என்பதை ஆராய்வது முக்கியமானது. தமிழ் மக்களின் விடுதலைக் குப் பிராந்திய அரசியலுடனும் சர்வதேச அரசியலுடனும் இருக்கக் கூடிய உறவுகளை விளங்கிக் கொள்ளுவது முக்கியமானது. இவற்றைக் கொஞ்சம் மேலோட்ட மாகவேனும் நோக்கும்போது, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பிற விடுதலைப் போராட்டங்களினின்றும் தன்னை மிகவும் தனிமைப்படுத்திக் கொண்டமையை நாம் உணர இயலுமாக இருக்குமென நம்புகிறேன்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையான பலவீனங்களென —மூர்க்கத்தனமான, நேர்மையற்ற நியாயப்படுத்தல்களைத் தவிர்ப்போமாயின்— இன்று ஓரளவேனும் பலராலும் ஏற்கப்படுவன, புலிகளின் சனநாயகமின்மை, முற்றிலும் இராணுவத் தன்மையுடைய போராட்ட அணுகுமுறை என்பனவாகும். அதேவேளை, அவற்றைத் தோற்றுவித்து உருவாக்குவதில் தமிழரசுக் கட்சிக்கும் அதன் மறு அவதாரமான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கும் ஒரு பங்கு இருந்தது. தமிழ்த் தேசிய அரசியலின் முக்கிய அடையாளங்களாக இருந்து வந்துள்ள ‘தனிப்பெரும் தலைவர்’ ‘ஏகப் பிரதிநிதித்துவம்’ ‘இன ஒற்றுமை’ என்ற கருத்தாக்கங்கள் விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கு மிக முந்தியன. மாற்று அரசியல் ஒன்று உருவாவதற்கெதிராகப் பழமைவாதம் ‘தமிழர் ஒற்றுமை’ என்ற கருவி யைப் பலவாறாகவும் பயன்படுத்தி வந்துள்ளது. அதன் விளைவாக, மக்கள் அரசியல் என்ற கருத்தாக்கம் தமிழ் அரசியற் பரப்பில் வேரூன்றத் தவறியது. அதை விடவும் சாதி, பால், பிரதேசம் என்பன சார்ந்த முரண்பாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அப் பிரச்சினைகளை இல்லை என மறுப்பதுடன் அவற்றைப் பற்றிப் பேசுவது தமிழ் மக்களைப் பிளவு படுத்தும் என வாதிப்பதும் தமிழ்த் தேசியவாதிகட்கு வழமையாகிவிட்டது. அவற்றை மறுத்ததால் அவை இல்லாமற் போய்விடவில்லை. இன்று அவை முன்பு நாம் அறிந்திருந்த அதேயளவு உக்கிரத்துடன் தொடருவதை நாம் அறிவோம். அதைவிட முக்கியமாகச் சுரண்டும் வர்க்கத்தின் தேசியத் தன்மை எத்தகையது என்பதைப் போருக்கு பிந்திய சூழல் நமக்குத் தெளிவாக்கியுள்ளது. வசதிபடைத்த யாரெவரெல்லாம் புலிகள் வென்று கொண்டிருப்பதாக நம்பிப் புலிகளுக்குச் சார்பாக நடந்து கொண்டார்களோ

www.padippakam.com

அவர்கலெல்லாரும் இப்போது ஆட்சியாளர்களுடன் தம்மை நெருங்கிக் கொண்டிருப்பதை நான் காணுகிறோம்.

எனவே, ஒரு தேசிய இனத்தின் விடுதலையை அதன் அக முரண் பாடுகளைப் புறக்கணித்து வெற்றிகரமாக முன்னெடுக்க இயலாது என நாம் உணரலாம். தேசியத்தினுட் செயற்பாடும் உயர் வர்க்க, சாதிய, ஆணாதிக்க, பிரதேச மேலாதிக்கச் சிந்தனைகள் சரிவரக் கையாளப்படாத போது, அவை ஏற்படுத்தும் விளைவுகள் போராட்டத்தை மட்டுமன்றித் தேசிய இன அடையா ளத்தையும் கடுமையாகப் பாதிக்க இயலும் என்பது நம் கவனத்துக்குரியது. 'தலித் தேசியம்' 'இரட்டைத் தேசியம்' என்பன போன்ற குழறுபடியான சிந்தனைகளைச் சிலர் வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலையும் பிரதேச அடிப்படையிலான பிளவும் ஏன் ஏற்பட்டன என்பது நம் கவனத்திற்குரியது. இன்று தமிழரிடையே உள்ள பெண்ணியம், வசதி படைத்த பெண்களின் அக்கறைகளை முதன்மைப்படுத்துவது மட்டுமன்றித் தேசிய விடுதலை நோக்கை நிராகரிப்பதாக அமைவது ஏன் என்பது நம் கவனத்துக்குரியது. அதற்கும் அப்பால் விடுதலைப் புலிகளின் போரின் போது தமது உயிர்களை ஈந்தோரும் வேறு பலவாறான தியாகங்களைச் செய்தோரும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளுமே. அவர்களது வர்க்கப் பின்னணியைச் சேர்ந்தோரே இன்று தமது வீடுகட்டும் நிலங்கட்கும் தொழில் கட்கும் மீள இயலாமல் அல்லற்பட்டுக் கிடப்போரிற் பெரும்பாலோராக உள்ளனர். தமிழ்த் தேசியத்தின் தலைமைகள் அனைத்தும் அவர்களின் நலன் பற்றிய அக்கறையே இல்லாமல் இருப்பதை நாம் காணுகிறோம். எனவே மக்கள் பற்றிய உண்மையான அக்கறையற்ற தேசிய இன விடுதலை அமைப்பு எதுவும் கோருகிற தனிநாடோ இன விடுதலையோ யாருடைய நன்மைக்கானது என்பதை நாம் கவனமாக ஆராய வேண்டும்.

தமிழ்த் தேசியம் இன்று ஒரு முட்டுச் சந்தில் வந்து நிற்கிறது என்பதை நாம் உணராவிட்டால், 2009 மே 17 வரை, விடுதலைப் புலிகள் தோற்க மாட்டார்கள் என்று நம்பியவர்களையும் விட மோசமான மனநிலையில் இருப்போராவோம். அந்த அவலத்துக்கான காரணங்களை விடுதலைப் புலிகளுக்குள் மட்டும் தேடுவோமாயின், நாம் ஒரு அரசியல் அந்தகாரத் துக்குள் நமது தேடலை நடத்துவோராவோம்.

தமிழ்த் தேசியத்தின் இன்றைய அவலத்துக்கான காரணங்கள், அது எந்த வர்க்க நலன்களைச் சார்ந்து எவ்வாறு வரையறுக்கப்பட்டது என்ற கேள்விக் கான விடைகளை ஆராயும் போதே தெளிவாகும் என்பது என்னுடைய மதிப்பீடு.

தமிழ்த் தேசியம் தனக்குள் முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் உள்ளடக்க முற்பட்ட நோக்கமும் அத் தேசிய இனங்களது இருப்பும் நலன்களும் பற்றிக் கொண்டிருந்த பார்வைகளும் தேசியம் பற்றிய புரிதலின் போதாமையின் விளைவானவையாக அல்லாது, ஒரு மேலாதிக்கச் சிந்தனை



படிப்பகம்

யின் வெளிப்பாடுகள் என்பது என்னுடைய கருத்து. அச் சிந்தனையின் பயனாகவே இன்றுவரை தமிழ்த் தேசியம் தன்னை ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனமாக அடையாயங் காணுவதைத் தவிர்த்து வந்துள்ளது என நினைக்கி றேன். அத்துடன் இன்னமும் இஸ்ரேலை முன் மாதிரியாக நோக்குகிற ஒரு போக்குத் தொடர்வதற்கும் அதையே விளக்கமாகக் காணுகிறேன்.

மேற்கூறிய முடிச்சுக்களை அவிழ்க்கும் போது, தமிழ்த் தேசியம் தனது அக முரண்பாடுகளைப் பற்றி அக்கறை காட்டத் தவறியது ஏன் என்பது முதலாக அந்நிய வல்லரசுகளையே சார்ந்திருக்க முயலுவது வரையிலான காரணங்களும் புலனாக இடமுண்டு. அவற்றையொட்டித் தமிழ்த் தேசியத் தலைமைகள் பிற தேசிய இன ஒடுக்கல்களும் போராட்டங்களும் பற்றி இதுவரை மேற்கொண்டு வந்த நிலைப்பாடுகளின் காரணங்களை விளங்கி யறிய வாய்ப்புண்டு.

எனவே, தமிழ் தேசியமும் தமிழீழக் கோரிக்கையும் விடுதலைப் போராட்டப் பாதையும் பற்றிய நமது விசாரணைகளை அடிப்படைகளிலிருந்து தொடக்க வேண்டும் என நினைக்கிறேன். சில கேள்விகளுடன் அந்த விசாரணையை நாம் தொடங்கித் தொடரலாம்.

*தமிழ்த் தேசிய இனம், தமிழ்த் தேசம் என்பவற்றைப் பற்றிய நமது வரலாற்று விளக்கங்கள் நம்பகமானவையா?*

*தமிழ்த் தேசிய இனத்தை அடையாளப்படுத்தும் பண்புகள் எவை?*

*தமிழ்த் தேசிய இனத்திற்குரிய தேவை பிரிவினையா, சுய நிர்ணயமா?*

*பிரிவினையாயின் அதற்குரிய சாத்தியப்பாடுகள் எவ்வாறானவையாக இருந்தன? அவை இனி எவ்வாறு அமையக்கூடும்? அதை இயலுமாக்கும் நேச சக்திகள் எவை?*

*சுயநிர்ணயமாயின் அதற்கான சாத்தியப்பாடுகள் எவை?*

*தமிழ்த் தேசிய இனம் மட்டுமே தனித்து நின்று போராடிச் சுய நிர்ணயத்தை வெல்ல இயலுமா? அதற்கான நேச சக்திகள் உள்ளனவா? அவை யாவை?*

*இப்போது சுயநிர்ணயத்தை ஏற்க மறுப்பவர்களைப் பகைமையுடன் நோக்கலாகுமா? அவர்களை வென்றெடுக்க வாய்ப்புக்கள் உள்ளனவா? வெல்வதற்கு உதவக்கூடிய நேச சக்திகள் எவை?*

*எந்தச் சூழ்நிலையிலும் அந்நியக் குறுக்கீடுகளின் நோக்கங்கள் எவ்வாறு இருந்தன? அந்நியக் குறுக்கீடுகளால் நன்மை கிட்டியுள்ளதா? உலக நாடுகள் கூறும் பாடங்கள் என்ன?*

*தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்கட்கு உதவக் கூடிய அந்நிய சக்திகள் உள்ளனவா? அவை ஆளும் வர்க்கங்களா, வல்லரசுகளா அல்லது தமது உரிமைகட்காகப் போராடும் மக்கள் இயக்கங்களா?*

*நமக்கான சர்வதேச ஆதரவை வெல்வதற்காக நாம் நம்முடைய பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே பேசுவது போதுமானதா? பிறருடைய நியாயமான கோரிக்கைகளைப் பற்றி நாம் அக்கறை காட்டும் தேவை உள்ளதா? இருப்பின் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்?*

*முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் தனித்துவமான தேசிய இனங்களாக நாம் ஏற்கிறோமா?*

*ஏற்கிறோமெனின், அவர்களது உரிமைப் போராட்டங்களை நம்முடையதுடன் இணைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா? அவ்வாறான வாய்ப்புக்களை ஏற்படுத்துவது எவ்வாறு?*

*சிங்களப் பேரினவாதம் என்பது அனைத்து சிங்கள மக்களுக்கும் உரியதா? அப்படியாயின் அதை வெல்லுவது எப்படி?*

*சிங்களப் பேரினவாதத்தால் அனைத்துச் சிங்கள மக்களது நலன்களையும் பேண இயலாது என நாம் ஏற்போமானால், அந்த முரண்பாட்டைக் கையாளுவது எவ்வாறு?*

*சிங்கள மக்களிடையே பேரினவாதம் வலுவாக உள்ளதன் காரணங்கள் எவை? அதற்குத் தமிழ்த் தேசிய வாதம் பங்களித்துள்ளதா?*

*எவ்வாறாயினும் சிங்கள மக்களிடையே பேரினவாதத்தைப் பலவீனப்படுத்தத் தமிழ்த் தேசியம் செய்ய இயலுமானது என்ன?*

*தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவது பற்றிப் எப்போதுமே பேசப்பட்டு வருகிறது. அந்த ஐக்கியத்தை எந்த அடிப்படையில் இயலுமாக்க முடியும்? இதுவரையிலான தோல்விக்கான காரணங்கள் எவை? அவற்றைத் தவிர்ப்பது எவ்வாறு?*

*அரசின் ஆயுத அடக்குமுறைக்கு எதிராக ஆயதப் போராட்டம் தேவையா? தேவையாயின் அப் போராட்டம் எப்படிப்பட்டதாக அமைய முடியும்? அப் பொறுப்பை யார் ஏற்பது? இதுவரையிலான அணுகுமுறை செல்லுமா? இல்லையெனின் மாற்று வழி என்ன?*

மேற்கூறியவாறான வினாக்களுக்குத் தெளிவான விடைகளை நாம் நேர்மையான முறையில் வந்தடைவோமானால், விவாதங்கள் விடுதலைப் புலிகளின்றும் விலகி போராட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றிய திசையில் ஆக்கமான முறையில் நகரத் தொடங்கும். குறிப்பாகச் சொன்னால், நடந்து முடிந்த அவலத்தின் காரணங்களை வெறுமனே தந்திரோபாயங்களும் நடைமுறைத் தவறுகளும் பற்றியதாக ஆராயாமல் அடிப்படைகளிலிருந்து தேடி அறிய வாய்ப்பிருக்கும்.

எந்த தவற்றையும் திருத்துவதும் தவறான நிலைப்பாடுகளை நிராகரிப் பதும் எந்தவொரு விடுதலை இயக்கத்தினதும் அடிப்படையான தேவை யாகும். எனவே, ஒரு குறிப்பிட்ட போராட்டம் ஒரு அவலமான முடிவை

www.padippakam.com

வந்தடையும் போது, நிகழ்ந்திருக்கக் கூடிய அனைத்துத் தவறுகளும் அடிப்படையிலிருந்து விசாரித்தறியப்பட வேண்டும்.

பல புதிய அமைப்புக்கள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் உருவாகியுள்ளன. எனினும் சில அமைப்புக்கள் தமிழ்த் தேசியம் பற்றிய அடிப்படையான சில வினாக்களை எழுப்பத் தயங்குகின்றன. சுயநிர்ணயத் தைப் பற்றிப் பேசும் போது பிரிவினைக் கோரிக்கையை முதன்மைப்படுத்து கின்றன. இடதுசாரிகளைப் பற்றிய பழமைவாத வாய்ப்பாடுகளை ஒப்பிக் கின்றன. இத்தகைய அணுகுமுறைகள் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை மீண்டும் படுகுழியில் தள்ள முனைவோருக்கே உதவும்.

விடுதலைப் புலிகளைப் பற்றிய அகச்சார்பான விமர்சனங்கள் பலரைக் கண்மூடித்தனமான புலி எதிர்ப்பிற்கும் அதன் பயனாக இலங்கை அரசாங்க ஆதரவு நிலைப்பாட்டுக்குள்ளும் தள்ளி விட்டுள்ளது. அவ்வாறே புலிகளின் நடத்தையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும் சில சமயங்களில் பிரச்சனைகளைப் பல கோணங்களிலும் இருந்து பார்க்கத் தவறுகின்றனர்.

இயக்கங்களிடையிலான மோதல்களும் முரண்பாடுகளும் காரணமாக ஏற்பட்ட கசப்புணர்வுகளும் பலரைக் குறிப்பான சில நிகழ்வுகட்கு முக்கியத் துவம் வழங்கி முழுமையான சித்திரத்தைத் தவறவிடுமாறு தூண்டுகின்றன.

எனவே விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்பான மீள்பார்வைகள், புலிகளின் தவறுகள் என்றும் குறிப்பிட்ட இயக்கங்களின் தவறுகள் என்றும் சம்பவங்கள் பற்றிய விமர்சனத்துடன் நின்றுவிடாது, அனைத்துத் தவறுகட்கும் காரணமாக இருந்திருக்கக் கூடிய கோட்பாட்டுப் பிரச்சினைகள் பற்றியும் பொதுவான நடைமுறை பற்றியும் கூடிய கவனங்காட்ட வேண்டி யுள்ளது.

நம்மைத் தவறுகட்கு அப்பாற்பட்டோராக மனதிற்கொண்டு நேர்மையான விசாரணைகளை நடத்துவது கடினம் என்பதைப் பற்றியும் நாம் கவனத்துடன் இருப்பது நல்லது. அல்லாவிடின் எல்லாவற்றிற்கும் பிறர் மீது பழியைப் போடுகிற ஒரு போக்கிற்கு நாம் இரையாக வாய்ப்பு அதிகம்.

“மே 19 என்பது முடிவல்ல, புதிய தொடக்கம்” என்பவர்கள் உள்ளனர். எந்தத் தொடக்கமும் முந்திய பயணங்களின் அனுபவங்களியிருந்து முழுமையாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் கடமை நம் எல்லாருக்கும் உள்ளது. ஏனெனில் இதுவரை நாம் சுட்டிக் காட்டத் தயங்கியவற்றுக்காக் கொடுக்கப்பட்ட விலை மிக அதிகம்.

*(நன்றி: தேடல், கனடா, 2012)*

*****



படிப்பகம்

www.padippakam.com

# கைலாசபதியும் தமிழ்த் தேசியமும்

## தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

*(2008இல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தேசிய மாநாட்டில் பேராசிரியர் க. கைலாசபதி நினைவு ஆய்வரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்)*

தமிழ்த் தேசியவாதம் தமிழ்ச் சமூகத்தை எத்தகைய முட்டுச் சந்திற் கொண்டுவந்து விட்டிருக்கிறது என்பதைப் பற்றி நாம் ஆழச் சிந்திக்க வேண்டிய தருணங்கள் அடிக்கடி வருகின்றன. ஆனாலும் நாம் அதைச் செய்யத் தவறுகிறோம். தேசியமே அடிப்படையானது, மற்ற முரண்பாடுகள் இரண்டாம் பட்சமானவை என்று சிலர் புதிய தத்துவங்களை முன்வைத்துப் பல ஆண்டுகள் கடந்துவிட்டன.

இப்போது தேசியவாதத்தை விடப் பிரதேசவாதத்தையே முன்னிறுத்தும் போக்குக்களுக்கு முகங்கொடுக்க இயலாத நிலையில் தேசியவாதம் தடு மாறுகிறது. எத்தனையோ இயக்கங்கள் உருவாக்கப் பட்டு உள்மோதல் களாலும் இயக்கங்களிடையிலான மோதல்களாலும் தமிழ்ச் சமூகம் வீணான உயிரிழப்புக்களைச் சந்தித்திருக்கிறது.

அன்று தமிழீழக் கோரிக்கைகளை நிபந்தனையின்றி ஏற்க மறுத்த எவரையுமே துரோகி என்று பட்டஞ் சூட்டிப் பழித்த தமிழ்த் தேசியவாதிகள் இப்போது எங்கே போய் நிற்கின்றனர்? யாருடைய நிழலை நாடுகின்றனர்? யாருக்காகப் பணியாற்றுகின்றனர்?

இன்று தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தேசிய இனமொன்றின் மீதான ஒடுக்கலாகவும் அதற்கெதிராக போராட்டம் சுயநிர்ணய அடிப்படை யிலான ஒரு தீர்வுக்கான போராட்டமாகவும் கருதப்படுவதற்கு மாறாக ஒரு மனித உரிமைப் பிரச்சினையாகவே பேசப்படுகிற ஒரு சூழ்நிலை எவ்வாறு உருவானது?

எவரதும் மனமாற்றத்தை நியாயப்படுத்தக்கூடிய விதமாகத் தமிழ் மக்களின் வாழ்வில் மேம்பாடு ஏற்பட்டுள்ளதா? தமிழ் மக்களின் அடிப்படை



படிப்பகம்

www.padippakam.com

உரிமைகள் வென்றெடுக்கப்பட்டுள்ளனவா? தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட்டுள்ளதா? தமிழ் மக்களின் வாழ்விடங்கள் மீது அவர்களது உரிமை மதிக்கப்பட்டிருக்கிறதா?

இதன் பின்னணியிலேயே பேராசிரியர் க. கைலாசபதி தமிழ்த் தேசியம் பற்றிக் கூறியவற்றை மீள்நோக்கலாம் என நினைக்கிறேன். தமிழ்த் தேசியம் பற்றிக் கைலாசபதி செம்பதாகையில் 1978–1981 காலப்பகுதியில் ஜனமகன் என்ற பெயரில் ‘காலமும் கருத்தும்’ என்ற பத்தியைத் தொடர்ந்து எழுதி வந்தார். அதில் அவர் தமிழ்த் தேசியம் பற்றி, தமிழ் அரசியல் நிலைமைகள் பற்றியும் சாதியத்திற்கெதிரான வெகுஜனப் போராட்டங்கள் பற்றியும் அன்றைய சூழலில் தமிழ்ச் சமூகத்தின் அரசியற் தலைமை பற்றியும் அதன் குறைபாடுகள் பற்றியும் அது செல்ல வேண்டிய திசைவழி பற்றியும் பல நீண்ட பத்திகளை எழுதியிருக்கிறார்.

கைலாசபதி தன்னை ஒரு அரசியல்வாதியாகவோ எந்த ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினராகவோ காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவரது எழுத்துக்களும் பல்துறை சார் செயற்பாடுகளும் அவரது மார்க்சிய நிலைப் பாட்டைத் தெளிவாக எடுத்துக் காட்டுவனவாகவே அமைந்தன.

அவர் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கத்திலேயே நின்றார். அவர்களது போராட்டங்களை ஆதரித்தார். பரந்த நோக்கில் அவரது சமூகப் பார்வையும், தேசிய, சர்வதேசிய அரசியல் விவகாரங்கள் பற்றிய பார்வையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவான மார்க்சியப் பார்வையே. தமிழ்த் தேசியம் தொடர்பில் மிகத் தெளிவான ஒரு நிலைப்பாட்டை அவர் எடுத்திருந் தார் என்பதை அவரது கட்டுரைகளின் வழி அறிய முடியும்.

தமிழ்த் தேசியம் பற்றிய கைலாசபதியின் கருத்துக்களை இரண்டு அடிப்படைகளில் நோக்க முடியும்.

1. தமிழ்த் தேசியம் பற்றிய கோட்பாடு ரீதியான பார்வை
2. தமிழ்த் தேசியத் தலைமைகள் பற்றிய விமர்சனப் பார்வை

கைலாசபதி “தமிழர் விடுதலைக் கூட்டணியை” “தமிழர் வியாபாரக் கூட்டணி” என்றே தனது பத்திகளில் அழைத்தார். “தமிழர் வியாபாரக் கூட்டணி” என்று அவர் கூறும் ஒவ்வொரு தடவையும் அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி செய்யும் “அரசியல் வியாபாரம்” பற்றிய விமர்சனம் அடங்கியிருக்கும். தமிழ்த் தேசியத்தின் குறைபாடுகள் பற்றியும் அது தொடர்ந்து எடுத்துவரும் குறுந்தேசிய நிலைப்பாடுகள் பற்றியும், அதனால் நீண்டகாலத்தில் ஏற்படப் போகும் ஆபத்துக்கள் பற்றியும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.



படிப்பகம்

*"1976 ஆம் ஆண்டு ஒரு பகிரங்க விவாதத்தின் போது 'தமிழீழத்தை வென்று தர உங்களிடம் என்ன வேலைத்திட்டம் இருக்கிறது?' என்று கம்யூனிஸ்ற்றான சண்முகதாசன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தருமலிங்கத்தை நடுவர் ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் முன்னிலையிற் கேட்டபோது, 'அது எங்கள் இரகசியம்' என்று தருமலிங்கம் கூறிய பதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் வியாபாரத்தை தெளிவாகக் காட்டும் ஒரு சம்பவம்."*

என எழுதும் கைலாசபதி, "இவையெல்லாம் தமிழ்த் தேசியத்தின் பெயரால் வெறும் வாய்ஜாலங்கள் மூலம் மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளே. இவை வெறுமனே தமிழ்த் துவேஷத்தை உருவாக்க உதவுமேயன்றித் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சனைக்கு தீர்வாக அமையாது" என்கிறார்.

இவ்வாறான தமிழ்த் தேசியச் செயற்பாடுகள் நீண்டகால நோக்கில் மலையகத் தமிழ் சமூகத்தையும் மூஸ்லிம் சமூகத்தையும் தமிழ்ச் சமூகத்திலிருந்து பிரிக்கவே பயன்படுகின்றன என எச்சரித்தார். இவ்வகையில் தமிழ்த் தேசியம் பற்றிய அவரது கணிப்பும் பார்வையும் மிகச் சரியானது.

முஸ்லிம்களின் தனித்துவம் பற்றியும் மலையக மக்களின் தனித்துவம் பற்றியும் எப்போதிருந்தோ சொல்லி வந்தவர்கள் தமிழ் மக்களைப் பிளவு படுத்தப் பார்க்கிறார்கள் என்று நிந்திக்கப்பட்டனர்.

வடக்கும் கிழக்கும் இணைந்த சமஷ்டியோ அதே அடிப்படையில் அமைந்த தமிழீழமோ எவ்வகையில் முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் என்பது பற்றி எள்ளளவும் அக்கறையில்லாமலே சமஷ்டிக் கோரிக்கையும் தனிநாட்டுக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டன. இவற்றை விமர்சித்தவர்கள் தமிழ்த் துரோகிகளாகக் காட்டப்பட்டனர். இவ்விடத்தில் எனக்கொரு கவிதை ஞாபகம் வருகிறது.

துரோகி எனத் தீர்த்து
முன்னொரு நாள் சுட்டவெடி
சுட்டவனைச் சுட்டது
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது

குற்றம் சாட்டியவனை
வழக்குரைத்தவனை
சாட்சி சொன்னவனை
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது
எதிர்த்தவனைச் சுட்டது

www.padippakam.com

சும்மா இருந்தவனையுஞ்
சுட்டது

இந்தியா பற்றிய மயக்கங்கள் இன்றும் இருந்து வருகின்றன. தமிழ்த் தேசியவாதிகள் கருணாநிதி என்ற மீட்பர் மீதும் அவர் ஈழத் தமிழர்களுக்காக எதையும் செய்பவர் என்றும் உருவாக்கப்பட்ட படிமத்தின் மீதும் இன்னமும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கருணாநிதியின் அண்மைய குத்துக் கரணங்கள் உட்பட, இந்தியா ஈழத் தமிழர்களை எத்தனையோ தடவை எய்த்திருக்கிறது. கடைசியாக பாரதீய ஜனதா கட்சியை நம்பினால் காரியம் கைகூடும் என்கிற நம்பிக்கையை வளர்க்கிற முயற்சிகளில் வந்து நிற்கிறோம். ஆனால் இந்தியா பற்றியோ கருணாநிதி பற்றியோ, மாயைகள் இன்னமும் கலைந்தபாடாய் இல்லை. நல்ல மாட்டிற்குத் தானே ஒரு சூடு.

1979இலேயே கைலாசபதி கருணாநிதி பற்றி எழுதினார்:

*“கருணாநிதி அண்மையில் வானொலிப் பேட்டியில் ‘தி.மு.க. இந்தியத் தமிழ் மக்களுக்கல்ல. ஈழம் வாழ் தமிழ்மக்களும் வாழ்வில் பாதிப்புறும் வகையில் உரிமைகள் மறுக்கப்பட்டால் மத்திய அரசின் ஊடாக நடவடிக்கை எடுக்கும்’ என்று கூறியுள்ளார். இக் கூற்று ‘முஞ்சூறு தான் போக வழியைக் காணவில்லை விளக்குமாற்றையும் தூக்கிச் சென்றதாம்’ என்பதுபோல் உள்ளது.”*

*“தமிழ்நாட்டில் தி.மு.கவும் கருணாநிதியும் ஏழு வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்தவர்கள். இந்த ஏழு வருட ஆட்சியில் தமிழ் நாட்டு மக்களுக்கு கிடைத்தது சாதிக் கொடுமைகள், பஞ்சம், பசி, பட்டினி முதலியனவாகும். மறுபுறத்தில் ஆளும் சொத்துடைய வர்க்கத்தின் பிரதிநிதிகளாகிய தி.மு.கவும் கருணாநிதியும் சாதாரண தமிழ்மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களான கோதுமை மா, சர்க்கரை என்பவற்றில் மோசடிசெய்து பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்தனர். இதனால் தி.மு.கவும் கருணாநிதியும் சக்காரியா கமிஷன் முன் குற்றவாளிகளாகவும் நிறுத்தப் பட்டனர். தனது நாட்டில் தனது மொழியினைப் பேசுகின்ற தனது இன மக்களின் பொருட்களையே கொள்ளையடித்த தி.மு.கவும் கருணாநிதியும் தான் மத்திய அரசின் ஊடாக அயல்நாடான ஈழத் தமிழ் மக்களுக்கு உதவப் போகிறார்களா?”*

கருணாநிதி பற்றிய கைலாசபதியின் மதிப்பீடு எவ்வளவு சரியானது. தமிழ்த் தேசியவாதிகளுக்கு இந்தியா குறித்து இருந்த மயக்கம் பற்றியும் கடுமையான விமர்சனங்களை அவர் எழுதியிருக்கிறார். ‘இந்திரா எங்கள் தாய், அவள் ஈழத் தமிழரது உரிமைகளை வென்று தருவார்’ என்று தமிழ்த் தேசியவாதிகள் முழங்கிய போது கைலாசபதி எழுதுகிறார்:



படிப்பகம்

*“இந்திரா காந்தி தன்னாட்டிலுள்ள சிறுபான்மை இனங்களை திட்டமிட்டே ஒடுக்கி வருகின்றார். அண்மையில் அவரது தேர்தல் தொகுதியான உத்தரப் பிரதேசத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் உயிருடன் கொழுத்தப் பட்டனர். மற்ற மாநிலங்களில் வாழும் சிறுபான்மை இனங்களை அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து திட்டமிட்டு இல்லாமல் செய்கிறார். இவர் மூலமா இலங்கைச் சிறுபான்மையினரின் உரிகைளைத் தக்கவைக்கப் பார்க்கிறார்கள் தமிழ்த் தேசியவாதிகள்? இதே இந்திரா காந்தியோ, இந்தியாவோ தேவையேற்படின் இலங்கையில் சிறுபான்மையினரை அடக்கவோ அவர்களது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அவர்களைத் துரத்தி யடிக்கவோ தயங்கார்.”*

இன்று சம்பூரில் நடப்பதென்ன? அதற்குத் தமிழ்த் தேசியவாதிகள் சொல்லும் நியாயம் என்ன?

ஒன்று விளங்க வேண்டும். இன்று தமிழகத்தில் ஈழத் தமிழர் மீதான அனுதாப அலையுள்ளது. ஆயினும், தமிழக அரசோ பிரதான கட்சி எதுவுமோ தமிழருக்கு ஆதரவாக எதுவுஞ் செய்யாது. ஈழத் தமிழர் பற்றி ஆவேசமாகப் பேசிக் கொண்டே விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டுகிற ஜெயலலிதாவுடன் கூட்டணி வைக்கச் சிலருக்கு முடிகிறது. அதேபோல, டில்லியின் முடிவுகளை மீற மாட்டேன் என்கிற கருணாநிதியுடன் ஒட்டிக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மேடைகளில் முழங்கவும் சிலருக்கு முடிகிறது.

நாங்கள் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்வோரின் மொழி இனிதாய் இருக்கலாம். ஆனால் அவர்களது நட்பு ஐயத்துக்குரியது. எனினும் அவ் வகையான பொருந்தாநட்பே தமிழ்த் தேசியவாதிகட்குத் தேவைப்படுகின்றது. அது அவர்களது சந்தர்ப்பவாத அரசியலுக்கும் பொருத்தமானது.

இவ்விடத்தில் இந்தியாவின் மீதும் சர்வதேச சமூகம் மீதும் தமிழ்த் தேசிய வாதிகள் வைததுள்ள நம்பிக்கைகள் பற்றி அரசியல் விமர்சகர் ஒருவர் சொன்ன வரிகளை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

*“இந்தியாவில் நாம் நம்புமாறு பரிந்துரைக்கப்படுகிற அரசியல் அமைப்புக்களதும் அரசியல் தலைவர்களதும் எண்ணிக்கை இந்துக் கடவுளரின் எண்ணிக்கையை எப்போது தாண்டும் என்று என்னாற் கூற இயலாது. ஆனால், என்றாவது தாண்டும் என்று தான் நினைக்கிறேன். அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய சமூகம், ஐ.நா. சபை, சர்வதேச சமூகம் என்று பலவேறு தெய்வங்களை வேண்டிக் கொள்ளுவதில் தான் தமிழ்த் தலைமைகளது கவனங் குவிந்திருக்கிறது.”*

விடுதலை என்பது காலக்கெடு வைத்து வெல்லப்படுவதல்ல. விடுதலை என்பது எவரும் வந்து பெற்றுத் தருவதுமல்ல. எந்தவொரு அரசியல் போராட்டத் தலைமையும் வழிகாட்டலாமே ஒழிய ஒரு சமூகத்தின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் திரள் தனது தோள்கள் மீது விடுதலைப் போராட்டத்தை ஏற்றுச் சுமந்து முன்செல்லாத வரை விடுதலை வெல்லப்படக் கூடியதல்ல. ஒரு ஆயுதப் போராட்ட வெற்றியை எடுத்து அதை விடுதலை யாக மாற்றுகிற பணி மக்களுடையது. எனினும், தமிழ்த் தேசியவாத அரசியல் மரபில், மக்கள் அரசியல், மக்கள் போராட்டம் என்கிற கருத்தாக் கங்கள் இன்று வரை வேரூன்றவில்லை. தமிழ் மக்களின் விடுதலையை கைலாசபதி சொல்லியபடி குத்தகைக்காரர்கள் எவராலும் பெற்றுத்தர இயலாது என்கிற உண்மையை நாம் மறக்கவிடலாகாது.

இன்று தமிழ்த் தேசிய இனம் ஒரு அபாயகரமான திருப்புமுனையை நோக்கி நிற்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினை பற்றிச் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்ப்பது என்ற போக்கின் வழியாகத் தமிழ் மக்களின் பிரச்சி னையின் அடையாளத்தை மாற்றுகிற அபாயம் இன்று நிஜமான ஒரு சாத்தியப்பாடாகி வருகிறது. இது மிக ஆபத்தானது. தமிழ் மக்களின் பிரச் சினை வெறுமனே ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக, அகதிகள் பிரச் சினையாக, எல்லாரிடமும் கருணையை எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கிற ஒரு சமூகத்தின் மீதான கழிவிரக்கமாக ஒடுக்குகிற திசையை நோக்கி நாம் திரும்பிக் கொண்டிருக்கிறோம். இது தடுத்து நிறுத்த வேண்டியது.

உலகில் நீதியையும் நியாயத்தையும் மனித உரிமையையும் மதிக்கிற எல்லாரது நட்பும் தமிழ் மக்களுக்கு தேவையானதும் பயனுள்ளதும் என்பதில் மறுப்பில்லை. ஆனால், அந்த நட்பு ஈவோருக்கும் இரப்போருக்கும் இடையி லான உறவாக இருக்கக்கூடாது. அது சமத்துவத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். ஒடுக்குமுறை தொடர்பான எப் பிரச்சினையும் கருணை யினால் தீர்க்கப்பட்டதில்லை.

தமிழ் மக்கள் முழுமையாக அரசியல் விழிப்புப்பெறாமல் அவர்கட்கு விடு தலையும் இல்லை விமோசனமும் இல்லை. அதுவரை கருணையின் பேரால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவர்.

தமிழ்த் தேசியவாதிகளுக்குத் தேசிய நியாயம் பற்றிக் கோட்பாட்டு ரீதியான பதிலையும் கைலாசபதி வழங்கியிருந்தார். தேசிய நியாயம் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டம் என்ற எல்லையைத் தாண்டும் போதே தேசிய மேலாதிக்கம் என்ற படிக்கட்டிற் காலை வைத்து விடுகிறது. ஐரோப்பிய வெள்ளை இனவாதமும் கிறிஸ்தவ மதவாதமும் ஐரோப்பிய தேசியவாதங்களும் யூத இன மக்களுக்கு எதிராக நடத்திய கொடுஞ் செயல்களின் வரலாறு பல நூற்றாண்டுக்கால விரிவை உடையது. அது ஜேர்மன் பாஸிஸமான நாற்ஸியமெனும் வடிவில் யூதர்களை ஒடுக்கியபோது ஐரோப்பியத் தேசியவாதங்கள் முதலில் அதைக் கண்டு கொள்ளவில்லை.

www.padippakam.com

ஏகாதிபத்திய நலன்கட்காக உலக வல்லரசுகள் இஸ்ரேலை உருவாக்கிய பின், விடுதலைக்காகப் போராடிய யூத தேசியம் ஆக்கிரமிப்பாளனாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களை மத்திய கிழக்கிற் காத்து நிற்கும் காவலனாகவும் மாறி விட்டது. அரபுத் தேசிய வாதங்களாகத் தம்மைக் காட்டிக் கொள்கிற பலவேறு அரபு ஆட்சிகள் பலஸ்தீன மக்களது விடுத லைக்காகச் செய்ததை விடத் தேசியத்தின் போராலும் தமது நாடுகளில் தமது ஆட்சியை உறுதிபடுத்தவும் தம் செல்வத்தைப் பெருக்கவும் செய்த காரியங்களே முதன்மையானவை.

தேசிய நியாயம் வலியுறுத்தும் தேசிய நலன் பிற தேசிய இனங்களின் நலிவிலும் அழிவிலும் தன்னை மேம்படுத்துகிற போக்கை ஒட்டியது. தேசியவாதக் கண்ணோட்டத்தில் தேசிய முரண்பாடுகள் ஓய்வதாயின் பிற தேசிய இனங்கள் ஒழிய வேண்டும். போர் இல்லாது இது இயலுமானதல்ல. ஹிற்லர் இவ்வாறான தேசியவாதத்தின் ஒரு உச்சக்கட்ட உதாரணம்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களது இனவிடுதலையை மலையகத் தமிழரி னதும் முஸ்லிம்களினதும் விடுதலையினின்றோ சிங்கள மக்களது விடுதலையினின்றோ பிரித்து நோக்குவது ஒவ்வொரு விடுதலை இயக்கத்தையும் பலவீனப்படுத்துவதாகும் என்று கைலாசபதி தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். தேசியவாதத்தின் அரசியற் தேவைகள் அதன் யதார்த்தத்திற்கும் அப்பாலான சில புனைவுகளை உருவாக்கி தேசிய அடையாளத்தையும் தேசிய இனத்தையும் தேசிய வரலாற்றையும் தேசிய கலாசாரத்தையும் பிற பொதுப் பண்புகளையும் அதன் வசதிக்கேற்ப வரையறுக்கத் தூண்டுகின்றன. இதற்குத் தமிழ்த் தேசிய வாதமும் விலக்கல்ல, என்னதான் உரிமை பற்றிப் பேசினாலும் இறுதி ஆராய்வில் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் வர்க்க உணர்ச்சியும் வியாபாரமுமே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. “தமிழ் மக்களின் உரிமை பற்றிய வீர வசனங்கள் பாரளுமன்றக் கதிரைகளுக்கு சாமரை வீசுவதற்கு உதவுவதற் கப்பால் எதையும் சாதிக்கவில்லை” என்கிறார் கைலாசபதி. இது தமிழ்த் தேசியம் பற்றிய சரியான பார்வை என்பதை வரலாறு எமக்கு உணர்த்தி யிருக்கிறது. கைலாசபதி இப்போது உயிரோடு இருந்தால் தமிழ்த் தேசிய வாதத்துக்குச் சார்பாக மாறி இருப்பார் என்பது சில தமிழ்த் தேசியவாதி களின் வாதம். கைலாசபதி இன்று உயிருடன் இருந்தால் தமிழ்த் தேசிய வாதம் பற்றி அவரது நிலைப்பாடு எப்படியிருக்கும் என்பதற்கான விடையை அவர் எந்த விதமான அரசியற் சிந்தனையின் அடிப்படையிற் செயற்பட்டார் என்பதை வைத்தே முடிவு செய்ய வேண்டியுள்ளது. கைலாசபதி மாக்ஸிய லெனினியச் சிந்தனையை ஏற்றவர். திரிபுவாதிகளுடன் நின்றவர்கள் அனுபவித்த, அனுபவித்திருக்கக் கூடிய சலுகைகளையும் வாய்ப்பு வசதி களையும் அவர் அறியாதவரல்ல. அவரது தெரிவு அவரது அரசியற் பார்வை யால் முடிவு செய்யப்பட்டது. இதனாலேயே அவரது தமிழ்த் தேசியம் பற்றிய கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. கூட்டணியும் அதன்



படிப்பகம்

தலைவர் அமிர்தலிங்கமும் தமிழரை ஏமாற்றிப் பிழைத்த கதையை கைலாசபதி தனது கட்டுரைகளில் தொடர்ந்து எழுதினார். அதிலும் குறிப்பாக ஜே.ஆரும் அமிர்தலிங்கமும் கூடித் தமிழரை ஏய்த்த கதையை இப்படி எழுதுகிறார் கைலாசபதி:

*"ஜே.ஆர்.–அமிர் சந்திப்புகளின் போது கூட்டணித் தலைவர் அடிக்கடி கேட்கும் அதி முக்கியமான கோரிக்கை ஊர்காவல் படை திரட்டும் உரிமையாகும்.*

*இளைஞர்கள் தம்மை விட்டுப் பிரிந்து சென்ற நாட்கள் முதல் அமிருக்கு ஒரே ஒரு கவலை! படைகள் இல்லாத் தள(ர்)பதியாகத்தான் இருக்கின்றேனே என்று. எனவே ஊர்காவற் படைக்கு ஜே. ஆர் அனுமதி வழங்கினால் சம்பளம் கொடுத்தாவது தனக்கென ஒரு படையை வைத்துக் கொள்ளவேண்டும் என்பது அவரின் ஆசை, அது கட்சிப்படையாகவும், கட்டுப்பாட்டை மக்கள் மீது செலுத்தும் படையாகவும் யாவற்றுக்கும் மேலாக, எதிர்ச்சக்திகளை மோப்பம் பிடித்து மடக்கும் படையாகவும் அது விளங்கும் என்பது அமிரின் எண்ணமாம். குறிப்பாக இளைஞர் சக்திக்கு மாற்றுசக்தியாகவும், 'வேளைக்கார' படையாகவும் அது இருக்கும் என எண்ணுகின்றார் போல தெரிகிறது.*

*உத்தேச ஊர்காவல் படை தமிழர் படையாக இருக்க மாட்டாது என்றும். தமிழ் தெரிந்தவர்களைக் கொண்ட படையாகவே இருக்க முடியும் என்றும் பாதுகாப்புப் படையினர் அபிப்பிராயம் தெரிவித் துள்ளனராம். கருணாநிதி, நெடுஞ்செழியன் பாணியில் தமிழ்ப்படை நடாத்தி, வீரவாள் ஏந்தி ஊர்வலம் வர எண்ணிய கனவுகள் பகற் கனவுகளாய் மாறிவிடுமா என்ற ஐயமும் கூட்டணியினரை வாட்டு கிறதாம். சரண் அடைந்தபின் தனித்துவம் பற்றி எப்படிக் கனவு காண முடியும்?"*

இதை வாசித்த போது எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வந்தது.

*வேலி முருக்கங்கொப்பை முறிச்சவன்*
*வெளிச் சிவர் மூலையில் ஒண்டுக்கிருந்தவன்*
*கொடியில தொங்கின சீலை எடுத்தவன்*
*வீடியோக் கசற்றைக் கொண்டு போனவன்*
*எல்லா விவரமும் நல்லாக் கேட்டு*
*விளம்பரமாக அறிஞ்சு சொல்ல*
*எங்கடை உளவுப் படையப் போல*
*எந்த இயக்கமும் செய்யமாட்டினை*
*எங்களை நீங்கள் கவனிப்பியளெனில்*
*தண்டம் விதிச்சுக் களவு போனதைப்*

www.padippakam.com

*பறிச்சுத் தருவம்*
*அவசரமெண்டால்*
*விளக்குக் கம்பில தொங்கவும் விடுவம்*
*சமூக விரோதியள் தலையளை வெட்டிச்*
*சந்தி நடுவில வரியா வைப்பம்*
*எதிரி இயக்க ஆக்கள் செய்யுற*
*தூள் யாவாரம் கள்ளக் கடத்தல்*
*ஆர் ஆரோடை படுத்து எழும்பினை*
*எல்லாக் கதையும் நல்லா அறிவம்*

*கொழும்பில பஸ் ஸ்ற்றான்ட் குண்டு வைச்சது*
*சமூகத் தொண்டரைச் சாகக் கொண்டது*
*விரிவுரையாளரைத் தெருவில சுட்டது*
*எங்களக் கேட்டா என்ன தெரியும்?*
*அண்ணை*
*கோளி கீளி களவு போனதேல்*
*சொல்லுங்கோவன் பிடிச்சுத்தாறம்*

தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றுவாயும் தமிழ் அடையாளத்துடனான அரசியற் தலைமைகளின் வரலாறும் படித்த, சொத்துடமைக்கார வர்க்கத் தலைமையும் அதனோடு நெருக்கமாகப் பிணைந்த சாதிய, நிலவுடைமைக் கண்ணோட்டங்களையுமே கொண்டிருக்கின்றன என்பதை தொடர்ந்து தனது கட்டுரைகளில் வலியுறுத்தியவர் கைலாசபதி.

தமிழ்த் தேசியம் சிங்கள மக்களை எதிரிகளாகக் கண்டு காட்டிய போதும் அதற்கு மாறாகச் சிங்கள மக்களை நண்பர்களாக மதித்து சிங்கள எழுத்தாளர், கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றியவர் கைலாசபதி.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்பு தமிழ்த் தேசியவாதம் கொலனிய ஆதிக்கத்துடன் பகைமையற்ற ஒரு நிலைப்பாட்டிலேயே தொடர்வதற்கு அதன் முதலாளிய நிலவுடமை வர்க்கத் தன்மைகள் ஒரு முக்கியமான காரணம். அதைவிடத் தென்னிலங்கையின் முதலாளி வர்க்கம் சிங்களப் பேரினவாத அரசியலையே மேலும் வலியுறுத்தியதால் தமிழ்த் தேசியவாதத் தலைமையால் ஏகாதிபத்திய எதிர்ப்பைப் புறக்கணித்துச் சிங்கள தேசியவாதத்தையே தமிழ் மக்களின் ஒரே எதிரியாகக் காட்ட முடிந்தது.

தமிழ்த் தேசியத்தின் வரலாற்றுப் போக்கை அறிந்து கொள்ள, கைலாச பதியின் கட்டுரைகள் எவ்வளவு பயனுள்ளவை என்பதற்கு இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம்:



படிப்பகம்

www.padippakam.com

*"மாவட்ட அபிவிருத்தி சபைகள் வருவதை முன்னிட்டு தமிழர் வியாபாரக் கூட்டணியினர் வானளாவப் பேசினர். தாம் மேடைகளில் முழங்கிவந்த 'ஈழத் தமிழகம்' வந்ததற்குச் சமம் என்றும், சமஷ்டி அமைப்பை விட மாவட்ட அபிவிருத்தி சபை அமைப்பு சிறந்தது என்றும் பிரசாரம் செய்தனர். இவற்றை யெல்லாம் வகுத்துக் கொடுத்த உலக சஞ்சாரி ஜெயரத்தினம் வில்சனைப் பெரிதும் பாராட்டினர். கூடவே நீலன் திருச்செல்வத்தின் பெருமையையும் பலவாறு புகழ்ந்தனர். அதிகாரம் பரவலாக்கப்படுகிறது என்றும் சுதந்திரத்திற்கு அடிப்படையே அபிவிருத்திதான் என்றும் பிதற்றினர், வட பகுதியைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத் திச் சபை சிறு பாராளுமன்றமாக விளங்கும் என்றும் கூறினர். மாவட்ட சபை நடவடிக்கைகளை, பாராளுமன்ற ஹன்சார்ட்போல வெளியிடவும், பாராளுமன்றக் கட்டிடத்தை போல யாழ்ப்பாண அபிவிருத்திச் செயலகத்துக்கு புதியதொரு –மாபெரும்– கட்டிடம் நிறுவ வேண்டும் என்றும் பேசப்பட்டது. இவ்வாறெல்லாம் தாம் பகற்கனவுகள் கண்டது மட்டுமல்லாமல் பிறரையும் பிரமைகளில் ஆட்டிப்படைத்தனர் கூட்டணிப் பிரமுகர்கள்."*

*"ஒரு சில வாரங்கள் கூடக் கழியவில்லை. அதற்குள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் வண்டவாளம் வெளிப்பட்டுவிட்டது. பொதுமக்களுக்கும் பெரும்பாலான அரசியல் அவதானிகளுக்கும் விடயம் முன்னரே தெரிந்ததுதான். ஆனால் கூட்டணித் தலைவர்கள் வழக்கம்போலவே ஏமாற்று நாடகத்தை நடாத்திக் கொண்டிருந்தனர். இப்பொழுது மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்களே கசப்பான உண்மையை ஒ்புக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். எத்தனை நாட்களுக்குத்தான் ஏமாற்றிப் பிழைக்க முடியம்?"*

தமிழ்த் தேசியத் தலைமைகள் எப்படி இருந்தன, அவற்றின் செயற்பாடுகள் எப்படி இருந்தன என்பது பற்றி கைலாசபதி என்ன எழுதினார் என்பதைப் பார்ப்பது தமிழ்த் தேசியத் தலைமைகள் எப்படி இருந்தன என விளங்க உதவும்:

*"இப்பொழுது பதவியிலிருக்கும் அரசாங்கம் தேர்தலுக்குப் பின் 1977ஆம் ஆண்டு இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்ட வேளையில் உலகின் பல பகுதிகளிலிருந்தும் பத்திரிகை நிருபர்கள் கொழும்புக்கு வந்திருந்தனர். அப்பொழுது அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் கட்டுரை எழுதிய நிருபர் ஒருவர், 'தமிழ் ஈழம்' கேட்ட தலைவர்களைச் சந்தித்ததைப் பற்றி எழுதினார். கொழும்பில் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றிலே குளிரூட்டப்பட்ட அறையிலே கொக்கா கோலா அருந்திக் கொண்டு*



படிப்பகம்

*தள(ர்)பதி அமிர்தலிங்கத்தைத் தான் பேட்டி கண்டதாக அந்த நிருபர் தொடங்கி, தனிநாடு கோரும் இன விடுதலைக்காக உழைக்கும் ஒரு தலைவரை அத்தகைய குஷியான சூழலில் கண்டது விசித்தரமான சம்பவம்தான் என்று முடித்திருந்தார்."*

கைலாசபதியின் அரசியல் கட்டுரைகளில் இழையோடும் அங்கதச் சுவையும் சம்பவங்களை அவர் விபரிக்கின்ற விதமும் அழகானவை. இவை வாசகனை வாசிக்கத் தூண்டுபவை. பத்திரிகைகளில் வராத செய்திகளைத் தனது விமர்சனக் கண்ணோட்டத்தில் அவர் எழுதுவார். அவர் எழுதுகிற செய்திகளே விமர்சனங்களாக இருக்கும். ஒரு சிறிய உதாரணத்தைப் பார்க்கலாம்:

*"அண்மையில் பிரதமர் பிரேமதாசா வடபகுதிக்கு விஜயம் செய்தார். பிரேமதாசா வந்த போது யாழ். கச்சேரியில் மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான மாநாடு ஒன்று நடாத்தப்பட்டதும், 'உத்தியோகபூர்வமான' அந்தக் கூட்டத்திலே தமிழர் வியாபாரக் கூட்டணியை சர்ந்த பதினொரு (வடகுதி) நாடாளும்மன்ற உறுப்பினர்கள் பிரசன்னமாயிருந்ததும் வழக்கம்போல பிரதமரை அமிர் உட்பட தலைவர்கள் நாவலிக்கப் புகழ்ந்ததும் ஓரளவு தினசரிகளில் வெளிவந்த செய்திகள். கச்சேரியில் நடந்த மாநாடு முன்கூட்டியே திட்டமிடப்பட்டது; ஒவ்வொரு எம்.பியும் ஆக்கபூர்வ மான அபிவிருத்தித் திட்டங்களுடனும் ஆலோசனைகளுடனும் வரவேண்டும் எனவும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது.*

*எம்.பி.க்கள் தமது திட்டங்களைக் கூறுமாறு பிரேமதாச கேட்ட பொழுது. இரண்டொருவர் இன்றைய நிலையில் நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனைத் திட்டங்களை முன்வைத்தனராம். உதாரணமாக கடல் நீரிலிருந்து உப்பை அகற்றி நல்ல தண்ணீர் விநியோகம் செய்யலாம் என்றாராம் ஒரு கூட்டணி எம்.பி. இவ்வாறு தமிழ்ப் பிரதேசத்தில் பொருளாதார-தொழில் நுட்ப அபிவிருத்தி குறித்து ஆக்கபூர்வமான நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை ஒரு மாவட்ட அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டத்திலே தக்கபடி சமர்ப்பித்து வெற்றிகாண மாட்டாத தமிழ்த் தலைமைகளா தனிநாடு பெற்றுத் தரப் போகிறார்கள்?"*

என்று தனது கட்டுரையை முடிக்கிறார். எளிய நடையில் மக்களுக்கு அரசியலை புரியவைக்கக்கூடிய வகையிலேயே கைலாசபதி எழுதி வந்தார். அவர் இறுதிவரை வெகுஜன அரசியலை வலியுறுத்தியவர். வெகுஜன அரசியல், மக்கள் யுத்தம், போராட்ட ஐக்கியம் போன்ற கருத்துக்களின் வழிப்பட்ட ஒரு விடுதலைப் போராட்டத்தால் மட்டுமே ஒடுக்கப்பட்ட மக்களது முழுமையான விடுதலையைப் பெற்றுத்தர முடியும் எனச் சொன்ன கைலாச

பதி 1980களின் தொடக்கத்தில் தமிழ்த் தேசியத்தின் திசைவழி பற்றி எழுதும் போது:

*“இன்று கூட்டணியை எதிர்நோக்கும் தருக்கரீதியான கேள்வி இது தான்: ஜனநாயக விரோதம், பாசிஸம், இன ஒதுக்கல், ஏகாதிபத்திய வழிபாடு, மோசமான மதவெறி இவை போன்ற வற்றைக் கூச்சம் இல்லாமல் கடைப்பிடிக்கும் அரசாங்கத்தை ஆதரிப்பதா, எதிர்ப்பதா, ஆசனங்களைப் பாதுகாப்பதா, அரசியல் உரிமைகளுக்காகப் போராட முனைவதா என்பதே.”*

இதில் எந்தப் பாதையை கூட்டணி முன்னெடுத்தது என்பதும் அதன் விளைவுகள் எங்களை எங்கே கொண்டுவந்து விட்டிருக்கிறது என்பதையும் நாம் எல்லோரும் நன்கறிவோம். ‘கடவுள்தான் காப்பாற்ற வேணும்’ என்ற வாசகத்தின் பின்னால் இருக்கிற இயலாமையும், கபடமும் கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டியவை. இங்கே நான் கேள்விக்கு உட்படுத்துவது அறியாமையாற் செய்கிற பிழைகளையல்ல. முழு அரசியல் அயோக்கியத் தனத்தையே!

*‘இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்’* என்ற நூலில் கைலாசபதி சொன்ன வரிகளோடு எனது உரையை முடிக்க விரும்புகிறேன். அவை இன்றைய சூழலிலும் எவ்வளவு முக்கியமானவை என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இவ்வரிகள் 1979 இல் எழுதப்பட்டவை.

*“தமிழ்த் தேசியம் இன்று முக்கியமான திருப்புமுனையில் உள்ளது. தனக்கு முன்னுள்ள இரு வழிகளில் ஏதாவது ஒன்றை அது தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. ஒன்று தனிமைப்பாடு மற்றும் மேலாதிக்கம் ஆகியவற்றைச் சார்தல். மற்றது பெரும்பான்மைச் சமூகத்துக்கும் தனக்கும் பொதுப்படையான அம்சங்களை இனங்கண்டு சனநாயக முறையிலான வாழ்க்கை மலர உழைத்தல். இவற்றில் எதைத் தேர்வது என்பது வெளிப் படையானது. ஆனால் இதற்கு ஒடுங்கிய இன நலன்களைத் துறந்துவிட்டு மனிதனை மனிதன் சுரண்டாத சமூக ஒழுங்கை நோக்கிச் செல்லும் தேசியப் போராட்டத்தை இரு இனங்களும் இணைந்து மேற்கொள்ளல் தவிர்க்கவியலாததாகும்.”*

*****



படிப்பகம்

www.padippakam.com

## *நவகொலனியத்தின் கீழ்த் தேசியமும் தேசமாதலும்*

# அடையாள அரசியல்

### *- இமயவரம்பன் -*

அடையாள அரசியல் என்ற பதம் 1970களிலிருந்து பாவனையிலுள்ளது. அமெரிக்கக் கறுப்பின விடுதலை இயக்கங்களின் தொடர்பில் உருவான போதிலும், அப் பதம், இன, இனக்குழு அடிப்படையிலான அரசியலுக்கு மட்டுப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக, அமெரிக்க கறுப்புக் கரும்புலிக் கட்சி, அடையாள அரசியலைத் தொழிலாளி வர்க்க உணர்வுடன் இணைத்தது. அடையாள அரசியல் என்ற எண்ணக் கரு, அதன் பின்பு வர்க்கம், பால், இனம், தேசியம் ஆகியவற்றையுங் கடந்து பல்வகையான சமூகப்-பண்பாட்டுக் குழுக்களையும் அவற்றின் நலன்களையும் உள்ளடக்குவதாகியது. மேரி வொல்ஸ்ற்றோன்க்றா∴ப்ற்றின் (Mary Wollstonecraft, 1759-1797) பெண்ணிய ஆய்வுகளிலும் ∴பரான்ற்ஸ் ∴பனொனின் (Frantz Fanon, 1925-1961) கொலனிய நீக்க ஆய்வுகளிலும் முற்போக்கான அடையாள அரசியலின் ஆய்வறிவுத் தோற்றுவாய்களைத் தேடலாம். எனினும், அடையாள அரசியலை வர்க்கப் போராட்டத்துக்குச் சவாலாக இல்லாவிடத்து ஒரு பிரதியீடாக முன்வைத்த அரசியல் இயக்கங்கள் வலுவாக வெளிக்கிளம்பிய 1990களிலேயே ஆய்வறிவு வட்டங்களில் அப் பதத்தின் பாவனை மிடுக்கானதாயிற்று.

ஒடுக்கப்பட்ட சமூகங்களின் கூட்டுத் தன்னுணர்வை உயர்த்துவதன் மூலம் அவற்றை அதிகாரமுடையனவாக்குவதாக, அடையாள அரசியல் உரிமை கோருகிறது. உதாரணமாகப், பெண் அல்லது இனக்குழுச் சிறுபான்மை எனும்படியான அடையாளம், ஒருவரை (மாறாவகைப்படுத்தல், ஒதுக்கி வைத்தல், அவரது இனக்குழு அடையாளத்தை நீக்கல் போன்ற) பண்பாட்டு ஏகாதிபத்தியத்தின் பாதிப்புக்கட்கோ வன்முறைக்கோ சுரண்டலுக்கோ ஓரங்கட்டலுக்கோ கீழ்ப்படுத்தலுக்கோ ஆட்படுத்த வாய்ப்புண்டு. அவ் வகையில், சில சமூகக் குழுக்கள் ஒடுக்கப்பட்டுள்ளன எனும் கருத்துடன் நெருக்கமான உறவுபூண்ட ஸ்தாபனப்படுத்தும் முறை என அடையாள அரசியலை யங் (Iris Marion Young, *Justice and the Politics of Difference*, Princeton University Press, 1990) வரைவிலக்கணப்படுத்துகிறார். எவ்வாறாயினும் அடையாள அரசியலை மேற்கொள்ளும் அனைத்துச் சமூகப்-பண்பாட்டுக் குழுக்களும் நலன்களும் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைக் குறிப்பனவல்ல. பிற குழுக்களின் ஆக்கிரமிப்பையும் தமது அடையாளத்தை இழக்கும் ஆபத்தையும் பற்றிப் பேசும் வெள்ளை நிறவாதக் குழுக்களும் உயர்சாதி மேட்டுக்



படிப்பகம்

www.padippakam.com

குடிகளும் போன்ற சில, உண்மையில், ஏகாதிபத்தியத்தினதும் முதலாளிய ஒடுக்குமுறையினதும் தரப்பிலேயே நிற்கின்றன.

அடையாள அரசியலைப் பற்றிய எழுத்தாக்கங்களிற் பெரும்பாலானவை, மேலை முதலாளிய நாடுகளில் உள்ள அரசியல் இயக்கங்களைப் பற்றியன வாயும் பாலினம், நிறம், பாலியல் தன்மை, (குறிப்பாகத் 'தேசியப் பண்பாட் டுக்குட்' சீரணமாவதை எதிர்க்கும் வந்தேறிய சமூகங்களின்) பண்பாட்டு அடையாளம் பற்றியனவாயும் உள்ளன. அல்லாத போது, அடையாள அரசியல், பெருமளவும், தொல்குடியினரின் உரிமைகள், சுயாட்சிக்கு அல்லது பிரிவினைக்கான தேசியவாதக் கோரிக்கைகள், சாதிப் பிரச்சனை கள், மத அடையாளம் என்பவற்றைப் பற்றியதாக உள்ளது.

தொடக்கத்திற் பின்நவீனத்துவம் அடையாள அரசியலில் —குறிப்பாகப் பெண்ணியத்தில்— அக்கறை காட்டியபோதும், இன்று, மேற்குலகில், பின் நவீனத்துவமும் அடையாள அரசியலும் வழி பிரிந்துள்ளன. எவ்வாறாயினும், தென்னாசியாவில் அடையாள அரசியலை முன்னெடுப்போர், வர்க்கத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் நிராகரிக்கவும் அடையாளங்களை ஒன்றிலிருந்து ஒன்றை பிரித்துவைக்கவும் பொதுவானதையும் சர்வவியாபகமானதையும் ஒதுக்குமாறு குறிப்பானதன் மீதும் தலத்துக்குரியதன் மீதும் அழுத்தம் வைப்ப தற்கும் பின்நவீனத்துவக் கருத்துக்களைத் துணைக்கழைக்கின்றனர். முரண் நகையாக, இனக்குழுவொன்றின் இலக்குக்கு வலுவூட்டுமாறு அதனுள் ஒரு பொதுமையை —அல்லது ஒருமையைக்கூட— நாடும் போக்கில், இத்தகைய அடையாள அரசியல் பொது அடையாளத்துக்கே கேடு விளைத்துள்ளது.

இந்தியாவில், தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒரு சமூக/அரசியற் சக்தியாக ஒன்றிணைக்கத் தவறியமை ஒருபுறமிருக்க, —சந்தர்ப்பவாத அரசியற் காரணங்கட்காகவும் மிக அரிதாக தலித் அடையாளத்தின் முரண்பாடுகளின் காரணமாகவும்— தலித் அரசியல் தலித்துக்ளிடையிலேயே சாதி அடிப்படை யிலோ அதினும் ஒடுங்கிய அடிப்படைகளிலோ, பிளவுகளை ஏற்படுத்தி யுள்ளது. இன்றுள்ள அடையாள அரசியல் ஒடுக்கு முறைக்கும் புறக்கணிப் பிற்கும் அடையாள மறுப்பிற்கோ அமுக்குதலுக்கோ உட்படும் தனித்துவமான சமூகக் குழுக்களின் நெகிழ்வான கூட்மைப்பைக் குறிக்கிறது.

மாக்சிய இடதுசாரிகளையும் பிற முற்போக்காளர்களையும் எதிர்நோக்கும் உண்மையான கேள்வி, அடையாள அரசியலை ஏற்பதா மறுப்பதா என்ப தல்ல. அவர்கட்கு முக்கியமானது ஏதெனின், வர்க்க அரசியலினதும் ஏதாதி பத்திய விரோத, மேலாதிக்க விரோத, தேசிய விடுதலைப் போராட்டங்களாக அதன் புலப்பாடுகளினதும் பெரும் பரப்பில், குறிப்பான அடையாள அரசியல் எதுவும் பொருந்தும் விதத்தை அடையாளங் காண்பதேயாகும். அடையாள அரசியல் வகை எதுவும் பிற அடையாள அரசியல் வகைகளுடன் எத்தகைய உறவு பூணுகிறது என ஆராய்வதும் முக்கியமானது.



படிப்பகம்

கிளர்ச்சிகர, இடதுசாரிப் போக்குக்களைக் —குறிப்பாக 1960களில்— புலப்படுத்திய அமெரிக்கக் கறுப்பின அரசியலைப் போலன்றி, நடுத்தர வர்க்கப் பெண்ணியமும் தலித்தியமும் இடதுசாரி விரேத அரசியலை மேற் கொண்டு, ஓடுக்கும் சாதி, வர்க்கச் சக்திகளுடனும் கூட்டுச் சேருமளவுக்குத் துரிதமாகச் சீரழிந்தன.

கொலனிய, அரைக்-கொலனிய ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளின் தேசிய வாத முன்னெடுப்புக்கள் ஏகாதிபத்தியத்தினின்று விடுதலையை நாடின. எனவே, ஒடுக்கும் தேசங்களின் தேசியவாதத்தை மிகவுங் கடிந்த மாக்சிய லெனினியர்கள் அவற்றை முற்போக்கானவையாக ஏற்றனர். எவ்வாறாயினும், கொலனியத்தின் முடிவையும் முன்னாட் கொலனிகளில் ஏகாதிபத்திய ஆதிக் கத்தின் முதன்மையான வடிவமாக நவகொலனியத்தின் வரவையும் அடுத்துத் தேசியவாதம் தேசிய முதலாளிய நலன்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. அது, ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்ததுடன் மட்டுமன்றிச் சிறுபான்மைத் தேசிய இனங்களையும் பழங்குடியினர் உட்பட்ட தேசிய சிறுபான்மை இனங் களையும் ஒடுக்குவதற்கு முற்பட்டது. அதன் பயனாகப் புதிய இனக்குழு-அரசியல் அடையாளங்கள் தோன்றின. அது மட்டுமன்றிப் —பிரிவினையை ஊக்குவிக்குமாறு ஒரு சிறுபான்மைக் குழுவையோ, மாறாக, எந்த விடுதலை இயக்கத்தையும் நசுக்குமாறு ஒரு ஒடுக்குமுறை அரசையோ ஏகாதிபத்தியம் சார்ந்துநிற்கக்கூடிய— விசித்திரமான புதிய கூட்டமைப்புக்களும் தோன்றின.

இந்தியாவின் தலித் அரசியல், தனது பகைவராகக் கருதிய இடதுசாரிக ளிடமிருந்து எட்டநின்றதன் மூலம், தன்னைப் பலவீனப்படுத்தியதுடன், ஒடுக் கப்பட்ட சாதியினரின் ஒற்றுமை என்ற நியாயமான இலக்கிற்கும் கேடு செய்தது. ஒட்டுமொத்தமான சாதி ஒடுக்கல் அமைப்பைச் சுட்டி உருவான தாயினும் ஒடுக்கப்பட்ட சாதியொன்றின் குறிப்பான பிரச்சனைகளைச் சார்ந்து உருவானதாயினும், இந்தியாவில் விருத்தியான சாதி அரசியல், ஈற்றில், ஆளும் மேட்டுக்குடிகளின் நலன்களையே பேணும் என்பதை அதன் செயற்பாடு உறுதிப்படுத்திற்று. அதற்கு முரணாக, இலங்கையின் வடக்கில் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம், மாக்சியத் தலைமையின் கீழ் விருத்தி பெற்றதுடன் சாதிப் பாகுபாட்டுக்கு எதிராக 1960களில் முன்னெடுக் கப்பட்ட ஒரு நீடித்த வெகுசனப் போராட்டமாகவும் அமைந்தது. வெகுசனங் களின் பரந்தளவிலான ஆதரவைப் பெற்ற இப் போராட்டத்துக்கு ‘உயர் சாதி யினர்’ எனப்பட்டோர் உட்பட்ட முற்போக்குச் சக்திகள் தலைமை தாங்கின.

அடையாள அடிப்படையிலான ஒடுக்குமுறை உள்ளளவும் அடையாள அடிப்படையிலான அரசியல் இருக்கும். எனவே அடையாள அடிப்படையி லான ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம், தவிர்க்கவியலாது, ஒடுக்கப்பட் டோரின் அடையாளத்தைக் கொண்டிருக்கும். தன்னளவில் அது பிற்போக் கானதோ ஆக்கமற்றதோ அல்ல. போராட்டமொன்று பிற நியாயமான போராட்டங்களுடன் எத்தகைய உறவு பூணுகிறது என்பதை வைத்தே அதன்

www.padippakam.com

முற்போக்கான உள்ளடக்கம் முடிவாகிறது. ஒரு குழுவின் நியாயமான போராட்டமெதுவும் தன் மீதான ஒடுக்குமுறையை ஒத்த அல்லது அதினின்று வேறுபட்ட ஒடுக்குமுறைகட்கு முகங்கொடுக்கும் பிற குழுக்களின் போராட்டங் களுடன் பொது நோக்கங் காணும்போது தன்னை வலுப்படுத்திக் கொள் கிறது. பிற நியாயமான போராட்டங்களிலிருந்து அதன் போராட்டம் தன்னைத் தனிமைப்படுத்துமாயின், அது தோல்வி காணுவதோடு, தோல்வியின் பயனான விரக்தியின் விளைவாக, அக் குழு அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் உட்பட்ட பிற்போக்குவாதிகள் தன்னைப் பயன்படுத்த அனுமதிக்கவும் இடமுண்டு.

ஒரு குழுவினரிடையே ஐக்கியத்தை உச்சப்படுத்தும் நோக்கில், பெரும் பாலும் தனியொரு முரண்பாடு சார்ந்த பிரச்சனைகளை அல்லது நெருங்கிய உறவுடைய பிரச்சனைனைகளை மட்டுமே முன்னெடுக்கின்றமை, அடையாள அடிப்படையிலின் பொதுவான பலவீனங்களில் ஒன்றாகும். அத்துடன் பரந்து பட்ட பிரச்சனைகளை முன்னெடுப்பதை விலக்கும் தன்மையும் உள்ளது. எனவே அடையாள அரசியற் குழுக்களின் கூட்டுக்கள் ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டத்திற்கான வலுவான ஒன்றிணைவுகளாகத் தம்மைப் பேணிக்கொள்ளத் தவறுகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் அடையாள அரசியற் செயற்பாட்டாளர்கள் சாதி, பிரதேசம், மதம் என்பன சார்ந்த பிரச்சனைகளை முன்னெடுத்துள்ள துடன் தேசியவாத, பெண்ணிய இலட்சியங்களுடன் இடையிடை உறவாடிய போதும், மாக்சியத்தின் மீதும் இடதுசாரி இயக்கத்தின் மீதுமான பகை அடையாள அரசியலின் பொதுவான ஒரு இயல்பாக இன்னமும் உள்ளது. அதனாற் போராட்டம் பலவீனப்படும் ஆபத்து உள்ளபோதும், தமது அரசியற் பிரதேசத்தை 'ஊடுருவற்காரர்களிடமிருந்து' பாதுகாக்கும் விருப்பம் அப் பகை தொடரக் காரணமாய் இருக்கக்கூடும். அடையாள அரசியல், பொருளா தார ஒடுக்குமுறையைத் தவிர்த்துப் பண்பாடு, மொழி, இனத்துவம், பிரதேசம், சாதி போன்றன சார்ந்த விடயங்கட்கு அழுத்தம் தெரிவிப்பது குறிப்பான கவனத்துக்குரியது. ஏனெனில், ஏகாதிபத்திய விரோதச் சாராம்சமேயற்று இடையிடையே ஏகாதிபத்திய விரோதத் தோற்றங் காட்டுவதை விட்டால், அடையாள அரசியலில், ஒடுக்குமுறைச் சமூக அமைப்பைப் பேணுவதில் ஏகாதிபத்தியத்தின் பங்கு அரிதாகவே பேசப்படுகிறது. எனவே, பிரதான அரசியல் நீரோட்டத்தினின்று அடையாள அரசியல் விலகி நிற்குமாறு, சமூகக் குழுக்கள் சார்ந்த பலவாறான முன்னெடுப்புக்களின் மூலம் என்.ஜி. ஓக்களின் அனுசரணையை அடையாள அரசியல் பெறுவதில் வியப்பில்லை.

அடையாள அரசியல் முன்னெடுப்புக்களை ஊக்குவிக்கும் ஆய்வறிவாளர் கள் பொருளாதார, வரக்கப் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கான காரணங்க ளிடையே, பூர்ஷுவா ஆய்வறிவாளர்களின் சுயமேம்பாட்டு அபிலாட்சைகளும் சோவியத் யூனியனின் உடைவுடன் சோஷலிசம் தோற்றுவிட்டது என்ற — மேட்டுக்குடி ஊடகங்களால் வலுவூட்டப்பட்டுள்ள— அவர்களது பொதுவான



படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கையும் அடங்கும். அதை விடவும், அரசியலில் வங்குறோத்தான ஆய்வறிவாளர்கட்குக் கைகொடுக்கவும் சமூகத்தை எதிர்நோக்கும் மைய மான பிரச்சனைகளினின்று கவனத்தைத் திருப்பவும் மேற்குலகின் மேட்டுக் குடிக் கல்வியாளர் நிறுவனங்கள் ஊக்குவித்துவரும் பின்னவீனத்துவம் உட்பட்ட பல்வேறு 'பின்' குத்தப்பட்ட கொள்கைகள் வந்தவாறேயுள்ளன.

பெண்ணியம், இனத்துவம், சாதி என்பனவும் பிறவுஞ் சார்ந்த அடையாள அரசியல் வடிவங்களிள் பிரசாரகர்கள், 'பகிரப்பட்ட அனுபவமும் அடையாள மும்' என்ற கருத்தைக் கொண்டு அரசியல் அடையாளமொன்றை வரை விலக்கணப்படுத்தவோ நிறுவவோ மேற்கொண்ட முயற்சிகள் தோற்றுள்ளன. அதைவிட அவலமாகக், குழுவொன்றுக்குத் தனித்துவமானதென, 'மற்றதி னின்று' அதன் வேறுபாட்டினதும் 'மற்றதுடனான' பகைமையினதும் அடிப் படையிற் சூட்டப்பட்ட கற்பனையான ஒரு அடையாளத்தை நம்பகமாக்கும் போக்கில், அடையாள அரசியற் குழுக்கள், எந்த அடக்குமுறை அதிகார அடுக்கினின்று தாம் வேறுபட்டு எதிர்த்துநிற்பதாக உரிமை பேசினார்களோ, அதே அதிகார அடுக்கின் முக்கியமான பண்புகளைத் தாமும் தமதாக்கிக் கொண்டுள்ளனர். குறுகிய தேசியவாத அமைப்புக்கள் பலவற்றிலும் பாராளுமன்ற அரசியல் அதிகாரத்தை நாடும் தலித் அரசியற் குழுக்களிலும் நடுத்தர வர்க்கப் பெண்ணிய அமைப்புக்களிலும் தமது பாலியல் இயல்பை மிகையாக வலியுறுத்தும் குழுக்களிலும் இப் பலவீனம் நீடிக்கிறது.

குறிப்பிட்ட ஒரு வகையான அடையாளத்தை அதன் உன்னதப்படுத்திய வடிவில் மிகையாக வலியுறுத்தும்போது அதற்குரிய அடையாள அரசியல் பிற நியாயமான இலக்குக்களுடன் ஐக்கியத்துக்கும் ஒருங்கிணைவுக்குமான வாய்ப்பை இழக்கிறது. அத்துடன், அதன் தொகுதிக்கு உட்பட்டோரிற் பெரும் பாலானவர்கள் சமகாலத்தில் தாங்கள் கொண்டுள்ள பிற அடையாளங் களால் அனுபவிக்கும் ஒடுக்குமுறைகளும் புறக்கணிக்கப்படுகின்றன.

சாதி அல்லது சாதிக் குழுக்களின் அடிப்படையிலான அடையாள அரசியல் பாலடையாளம் சார்ந்த அடையாள அரசியலுடன் முரண்பட்டுள்ள தை நம்மிற் பலரும் அறிவோம். இங்கு ஒவ்வொரு தரப்பும் மற்றதன் அடை யாளத்தின் அடிப்படையிலான ஒடுக்குமுறையைப் புறக்கணிக்கும் அளவுக்கு மற்றதன் முக்கியத்தைக் குறைத்துப் பேசுகிறது. தேசியவாதம், குறிப்பாகத் தேசிய மோதலின் போது, பால், சாதி, வர்க்க அடிப்படைகளில் தேசிய இனத்துக்குட் செயற்படும் ஒடுக்குமுறைகளைக் கவனிப்பதைப் பிற்போடவும் புறக்கணிக்கவும் நிராகரிக்கவுங்கூட முற்படுகிறது. பண்பாட்டையும் பாலியல் தன்மையையும் பற்றிய அடையாள அரசியற் குழுக்கள், பலவிடத்தும், சமூக ஒடுக்குமுறை சார்ந்த பெரிய பிரச்சனைகளைப் பற்றிக் குறிப்பிடுவதையும் தவிர்க்கின்றன. பிற அடையாள அரசியற் குழுக்களுடனான அவற்றின் கூட் டமைப்புக்கள் குறிப்பான பிரச்சனைகளைப் பற்றியனவாயும் குறுகிய காலத் திற்கானவையுமாகவே இருந்துள்ளன.



படிப்பகம்

பிற அடையாளங்களைப் புறக்கணித்துத் தொழிலாளி வர்க்க இலக்குக் களை முன்னெடுக்கும் இன்னுமொரு அடையாள அரசியற் குழுவாக மாக்சியர்களைப் காட்டுகிற போக்கும் அடையாள அரசியலை விதந்துரைப் போரிடையே உள்ளது. வேறெதுவும் இதனிலும் பார்க்க உண்மையினின்று தூர நிற்பது அரிது. மாக்சியம் தனது தொடக்க நிலையிலிருந்தே பால் ஒடுக்குமுறையைப் பற்றிப் பேசியுள்ளதையும் ஏகாதிபத்திய யுகத்தின் மாக்சிய மான மாக்சியம்-லெனினியம் தேசிய விடுதலையையும் இன அடிப்படையிலும் சாதி அடிப்படையிலுமான ஒடுக்குமுறைகட்கெதிரான போராட்டங்களின் சார்பாக மேற்கொண்டுவந்த அறஞ்சார்ந்த நிலைப்பாட்டையும் அறிந்தோர் உண்மையை அறிவர். பண்பாட்டு உரிமைகள் தொட்டுப் பொருளாதார உரிமைகள் வரை, ஏகாதிபத்தியத்தினதும் உள்நாட்டு முதவாளியத்தினதும் சுரண்டலினின்றும் கொள்ளையடிப்பினின்றும் தொல்குடிக் குழுக்களின் உரிமைகளைக் காக்க ஒவ்வொரு செயற்பாட்டுத்தளத்திலும் மாக்சியர்கள் முன்னிலையில் இருந்து வந்துள்ளனர்.

நாம் இன்று காண்பது போல, தொழிற்சங்கமொன்று தனது இலக்கைத் தொழிலாளி வர்க்கத்தினதோ தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினதோ உரிமைகளைக் காப்பதற்கு வரையறைப்படுத்தலாம். மாக்சியர்களோ, முழு அரசியல் பொருளாதார அமைப்பையும் கருத்திற்கொண்டு வர்க்க முரண்பாடு தவிர்ந்த பிற முரண்பாடுகளையும் வர்க்கச் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக் கும் அருகாக வைத்துக் கருதுவதோடு சில சமயங்களில் அம் முரண்பாடு கட்குக் கூடிய முக்கியத்துவமும் வழங்கியுள்ளனர்.

எனவே, —மாக்சியர்களாகப் பாவனைகாட்டும் வரட்டுவாதிகளன்றி— மாக்சியர்கள், எவ்வகையான சமூக ஒடுக்குமுறையைப் பற்றியும் பராமுகமாக இருப்பது தவறானது. எந்த அடிப்படையிலும் மனிதரை மனிதர் ஒடுக்குவதை மாக்சியர்கள் எதிர்க்க வேண்டும் எனினும், அவர்கள் வர்க்கமும் வர்க்கப் பேராட்டமும், ஏகாதிபத்தியத்தின் நவகொலனிய வடிவமும் அதன் இன்றைய உலகமயமாதல் வேலைத்திட்டமும் என்ற பெரும் பரப்பில் வைத்தே பிரச் சனைகளை நோக்க வேண்டும். நவகொலனியப் பின்புலத்தில் மாக்சியர்கட் குத் தேசிய இனப் பிரச்சனை முக்கியமானது— எனினும், அது கொலனிய யுகத்தில் இருந்தது போலவோ பேரினவாத அரசியலும் குறுந்தேசியமும் அதனை முன்னிறுத்தும் விதத்திலோ அமைந்ததல்ல.

அடையாளங்கள் உள்ளன. ஆனாற், பிற அடையாளங்களிலிருந்து தனிமைப்பட்ட அரசியல் அடையாளமொன்றை ஒரு குழுவிற்கு வழங்கக் கூடியவாறு ஒருசீரான முறையிலும் தனித்துவமாகவும் அதற்குட் பகிரப்படும் அடையாளங்கள் இல்லை. மனித விடுதலை என்னும் பேரண்ட இலக்கிற்குக் குழிபறிக்கும் விதமாகவே அடையாள அரசியல் இதுவரை பயன்பட்டுள்ளது. ஆயினும், அது அடையாள அரசியலின் தோற்றத்துக்குரிய காரணங்களை நிராகரித்தற்கான வாதமாகாது. அடையாள அடிப்படையிற் பிரிந்துள்ள ஒரு

உலகில் அடையாளம் முக்கியமானது. தம்மிலும் வலிய அடையாளங்களால் உள்வாங்கப்படுவோம் என்ற, விளங்கிக்கொள்ளத்தக்க, அச்சம் சமூகங்க ளிடையே உள்ளது. அடையாள அடிப்படையிலான ஒடுக்கல் உள்ளளவும், அடையாள அடிப்படையிலான போராட்டங்கட்கான நியாயமும் இருக்கும். கேள்வி ஏதெனின், இத்தகைய போராட்டங்களால் பிற நியாயமான போராட் டங்களினின்றுந் தனித்து நின்று வெல்ல இயலுமா என்பது தான்.

ஒடுக்குமுறையை அதன் பல்வேறு வகைகளிலும் எதிர்க்கும் அரசியல் வடிவங்களில், மாக்சியம்-லெனினிய அரசியல் மட்டுமே, பகை முரண்பாடு கட்கும் சினேக முரண்பாகட்குமிடையே வேறுபாடு காணக்கூடியதாகவும் அதன் மூலம் அடையாள அரசியலின் பிரசாரகர்கள் முன்னிறுத்தும் முரண் படும் நலன்கள் சார்பான பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றலைக் காட்டி யுள்ளது. எனவே, அடையாள அடிப்படையிலான எந்த நியாயமான போராட் டத்துடனும் பொது நோக்கம் காண மாக்சிய-லெனினியர்கட்கு இயலும் என்பதுடன் ஏகாதிபத்தியம் ஆதரித்து நிற்கும் அடக்குமுறை அமைப் பொன்றிற்கெதிராகப் பலதரப்பட்ட ஒடுக்கப்பட்ட குழுக்களையும் ஐக்கியப் படுத்தும் சக்தியாகச் செயற்படவும் அவர்கட்கு இயலும்.

பொது நோக்கொன்றிற்காகப் பிற அடையாளங்களுடன் சேர்ந்து செயற் படும் ஆற்றல், வரையறைகட்குட்பட்டேனும், தேசிய விடுதலை அரசியலுக்கு உண்டு. முழு மானிடத்தினதும் இலக்குக்களை விளிக்க வேண்டி வரும்போது அது தோற்குமெனினும், தனது சமூகத்தினுள் உள்ள சமூக அநீதிகளைக் கவனிப்பதன் மூலம், விடுதலைக்கான போராட்டத்தை வலுப்படுத்த அதற்கு இயலும். இத்தயை தேசியவாத முன்னெடுப்புக்களை ஆதரிப்போர் —குறு கிய, நடுத்தரமான கால அளவிலேனும்— எளிதாக மாக்சிய-லெனினியர் களதும் பிற முற்போக்குச் சக்திகளதும் நேசசக்திகளாக இயலும்.

எவ்வாறாயினும் தேசியவாதம் குறுகியதாகவும் தனது ஐக்கியத்தின் பேரிற் பிற நியாயமான நோக்கங்களை மறுப்பதாயும் இருக்க விரும்பி, மூலோ பாயம் அல்லது தந்திரோபாயம் என்ற பெரில் ஏகாதிபத்தியத்துடனும் பிற் போக்குடனும் சேர்ந்து நிற்குமேயாகில், ஏகாதிபத்தியமும் பிற்போக்கும் தமது குறுகிய நோக்கங்கட்காகத் தன்னைப் பயன்படுத்துமாறு ஒடுக்கப்பட்ட பெரும் பான்மையிடமிருந்து அது தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளும்.

எனவே, ஒடுக்கப்பட்டோர், அடையாள அரசியலின் ஆழத்திலுள்ள நியாயமான இலக்குக்களை அடையாள அரசியலின் வேலைத்திட்டத்தினின்று பிரித்தறியவும் ஏகாதிபத்திய நோக்கங்கட்கு இரையாகாதவாறு பிரச்சனை கட்குக் கவனங்காட்டவுமான வழிமுறைகளை வகுப்பதற்கு மாக்சிய-லெனினி யர்கள் மக்களுக்குக் கடப்பாடுடையோராவர்.

*****

www.padippakam.com

# சுதந்திரம்

## *(நி. பிரதீபன்)*

சுதந்திரம் சுதந்திரம்
இலங்கைத் திருநாட்டுக்கு இன்னுமொரு சுதந்திரம்
அள்ளி அளித்திருக்கிறார் ஆளும் வர்க்கத்தார்.

நாட்டை உயர்த்திட உழைத்திடும்
பல்லினத்துப் பாட்டாளியும் விவசாயியும்
நடுத் தெருவில் அடிமைகளாய்த் திண்டாட
ஆளும் வர்க்கத்து எஜமானர்
அள்ளிக் கொடுக்கின்றார் சுதந்திரத்தை.

உழைக்கும் மக்களை ஒன்றுபட விடாது
ஆளும் வர்க்கத்துப் பிசாசுகள்
அள்ளித் தெளிக்கும் சுதந்திரம்! சுதந்திரமா?
ஆளும் வர்க்க ஆசாமியே
ஒரு வாசகத்தை மட்டும் நினைவிற் கொள்.

நீ
எங்களைத் தினமும் கூர்மைப் படுத்துகின்றாய்
எங்கள் வறுமை கூடக் கூட
ஆயிரமாய் லட்சமாய் ஐக்கியப் படுவோம்.

ஏனெனில்
இழப்பதற்கு எதுவுமே இல்லாத
ஸ்பாட்டகஸின் வழித் தோன்றல்களாய்
இப்போதும் நாம் இருப்பது தான்.
அப்போது
செவ்வொளி வீசிய புதிய பரிதியாய்ப்
பூகோளம் நிலைமாறும்
உழைப்பவனுக்கே உலகென்பது மெய்ப்படும்.

அதுவரை
வெடி கொழுத்து கொடி பிடி
ஆடு பாடு கொண்டாடு!

*20-05-2009*

*(நன்றி: புதிய பூமி, ஜூலை-ஓகஸ்ற் 2009)*



படிப்பகம்

# பாதுகாப்பென்பது ஒட்டிப்பிறந்த இரட்டையர்

## *ஆட அஹரொனி*

நமது பாதுகாப்புக்காக
நாம் அவர்களின் பற்களை உடைப்போம்
நமது பாதுகாப்புக்காக
அவர்களின் தலைகள் மீதும் அவர்களின்
பாதுகாப்பின் மீதும்
அவர்களின் பழத் தோட்டங்களின் மீதும்
அவர்களின் திராட்சைக் கொடிகளின் மீதும்
அவர்களின் வீடுகளின் மீதும் அவர்களின்
பெருமிதத்தின் மீதும்
நாம் தொன் கணக்கில் குண்டு வீசுவோம் —
அனைத்தும் நமது பாதுகாப்புக்காக மட்டுமே.

ஆயினும் நமது பாதுகாப்பு எங்கே?
அவர்களுடைய பாதுகாப்புக்கு என்னாயிற்று?
மெய்யாக நமது பாதுகாப்பும் அவர்களுடைய
பாதுகாப்பும்
ஒட்டிப் பிறந்த இரட்டையர்.
மெய்யாக ஒன்றை அடியாமல்
மற்றதை அடிக்க இயலாது

*நன்கறியப்பட்ட ஒரு இஸ்ரேலிய எழுத்தாளரான பேராசிரியர் ஆட அஹரொனி (Ada Aharoni) இது வரை 22 நூல்களை வெளியிட்டுள்ளார். மேற்காணுங் கவிதை இஸரேலியப் படைவீரர்கள் லெபனானிலிருந்த போது எழுதிய கடிதங்களின் அருட்டுணர்வால் 2001 மேயில் எழுதப்பட்டது.*

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***